பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET மூலம்
குறைந்த கட்டணத்தில் தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித தபால்/பொதிகள் சேவை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-2222670, 2223588
FAX: 2223214
Email-del-smskr@eureka.lk

# வலம்புரி

The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி 08 | ஞாயிற்றுக்கிழமை (22.06.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 185

## இலங்கை-இந்திய உறவை எவராலும் பிரிக்க முடியாது

# கூட்டணி எம்.பிக்களை அழைத்து

# இந்தியத் தூதுவர் எச்சரிக்கை!

## விசா பறிமுதலாகும் என்றும் பயமுறுத்தல்

(நமது சிறப்பு நிருபர்)

**வரலாற்று ரீதியாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள சீரான நல்லுறவை எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது. அத்தகைய செயலில் எவரும் ஈடுபட மாட்டார்கள் என்று நம்புகிறோம். உங்களைப் பொறுத்த அளவில் நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை ஒழுங்காகச் செய்யாது போனால் உங்களது விசாவை இந்தியா மீளப் பெற்றுக் கொள்ளும். இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பிக்களுடனான சந்திப்பின் போது இந்திய தூதுவர் நிருபம்சென் எச்சரிக்கை செய்திருப்பதாக தெரியவருகிறது.**

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம்சென் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏழு எம்.பிக்களையும் கடந்த வியாழக்கிழமை இரவு சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு எச்சரிக்கை செய்திருப்பதாக தெரியவந்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பிக்களுடனான இச் சந்திப்பின் போது இந்திய தூதரக உயர் அதிகாரிகளான ராவின் மற்றும் மிது ஆகிய இருவரும் உடன் இருந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பிக்களுடனான இச் சந்திப்பில் இந்தியத் தூதுவர் நிருபமசென் கூறுகையில் நீங்கள் உங்களது அரசியல்

(10ம் பக்கம் பார்க்க)

## "பீல்ட்பைக்" இல் மக்களை அச்சுறுத்தும் படையினர்

### கண்காணிப்பு குழுவிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த மாவீரர் துயிலும் இல்ல பொறுப்பாளரும், பொதுமக்களும் "பீல்ட்பைக்" படையினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகளினால் யாழ். மாவட்ட கண்காணிப்புக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 9.45 மணியளவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணி இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது, ஆயுதங்களுடன் அங்கு வந்த படையினர் துயிலும் இல்லங்களில் நின்று துப்புரவுப் பணியில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தியதாகவும் மாவீரர் துயிலும் இல்லத்தை பீல்ட்பைக்கில் இரண்டு தடைவைகள் சுற்றி அச்சுறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## இடைக்கால சபை குறித்து பிரதமர்-ஜனாதிபதி சந்திப்பு

### பாதுகாப்பு நிலைபரமும் ஆராய்வு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபை கட்டமைப்பொன்றை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குரிய நடவடிக்கைகளை அரசு தற்போது மேற்கொண்டு வருகிறது. எனினும் இது தொடர்பான முழுமையான திட்டம் இன்னமும் தயாரிக்கப்படவில்லை. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவை நேரில் சந்தித்து தெரிவித்துள்ளார்.

டோக்கியோ மாநாட்டிற்கு முன்பும் அதற்கு பின்பும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை ஜனாதிபதி சந்திரிகாவை சந்திப்பதற்குப் பல தடைவைகள் முயற்சி செய்தும் நேற்று முன்தினம் சந்திப்பதற்கான நேரத்தை ஜனாதிபதி பிரதமருக்கு ஒதுக்கி கொடுத்திருந்தார்.

பிரதமர் ரணிலினதும் ஜனாதிபதி சந்திரிகாவினதும் நேரடிச் சந்திப்பின்போது வேறு எவரும் இருக்க

(10ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் லண்டன் பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுக் காலை லண்டன் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

லண்டன் சென்றுள்ள பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா நாளை பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயரை சந்தித்து விடுதலைப்புலிகளுடனான சமாதான முயற்சிகள் குறித்தும் அதன் தற்போதைய தேக்க நிலை குறித்தும் கலந்துரையாடவுள்ளார். (ம)

## ஏகப்பிரதிநிதித்துவத்தில் எனது கருத்து புலிகளுக்கு எதிரானதல்ல!

### ஆனந்தசங்கரி பி.பி.ஸிக்குப் பேட்டி

(லண்டன்)

விடுதலைப்புலிகளுக்கு நான் எதிரானவன் அல்லன். அவர்களுக்கு எதிராக செயற்படுபவனும் அல்லன். இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

நேற்றைய தினம் பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயற்குழு என்ற ஒன்று இருக்கவில்லை. கடந்த தேர்தலில் 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தேர்தலில் தோல்வியுற்றவர்கள் தீர்மானம் எடுப்பதில் தங்களுக்கும் பங்கு வழங்க வேண்டும் என விரும்பிக் கேட்டதனால் ஒவ்வொரு கட்சியிலும் இவ்விரண்டு பேரைத் தெரிவு செய்தோம். அந்தக் குழுவிற்கு என்னை அமைப்பாளராகத் தெரிவு செய்தனர்.

ஆனால் அவர்களின் நடவடிக்கைகள் எனக்குப் பிடிக்கவில்லை. கடந்த காலத்தில் அரசாங்கத்தோடு ஒட்டி உறவாடியவர்கள் ஆயிரக்கணக்கான அப்பாவி இளைஞர்களை விடுதலைப்புலிகள் என்று காட்டிக் கொடுத்தவர்கள். இவர்களுடன் ஆரம்பத்திலிருந்து எனக்கு ஒத்துப் போகவில்லை இதனால் கடந்த 6மாதமாக நானே ஒதுங்கியிருந்தேன். என்னுடைய இடத்திற்கு,



(10ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி குடத்தனையில் முட்கம்பி வேலி அமைப்பு

### மீனவர்கள் பாதிப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சிக் கிழக்கில் குடத்தனைப் பொற்பதி கடற்கரைப் பகுதியில் கடற்படையினரால் நீண்ட தூரத்திற்கு முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு வருகிறது.

கடற் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களைச் சோதனைக்குட்படுத்துவதுடன் சகல மீனவர்களையும் குறித்த ஒரு பாதையூடாக சென்று வருவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே படையினர் இவ்வாறு திடீரென முட்கம்பி வேலிகளை அமைத்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் இந்த நடவடிக்கை தொடர்பாக வடமராட்சி கிழக்கு மீனவர்களினால் வல்வெட்டித்துறையிலுள்ள கடற்புலிகளின் அரசியல்

(10ம் பக்கம் பார்க்க)

## இறங்குதுறை ஊழியர்கள் மீது படையினர் கடும் சோதனை

### பொருள் இறக்கும் பணி முற்றாக ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து பொருட்கள் இறக்கும் பணிகள் நேற்று முழு நாளும் நடைபெறவில்லை.

பொருட்களைக் கப்பலில் இருந்து இறக்குவதற்காகச் சென்ற இறங்குதுறை ஊழியர்கள் நீண்ட நேரமாகக் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டு உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

கப்பலில் இருந்து பொருட்களை இறக்குவதற்காகத் தினமும் காலை 7 மணிக்கு ஊழியர்கள் இறங்குதுறைக்கு செல்வது வழக்கம். நேற்றைய தினமும் அவ்வாறே ஊழியர்கள சென்ற பொழுது இறங்குதுறைக்குக் கப்பல் வருவது தாமதமாகுமெனத் தெரிவித்த கடற் படையினர் காலை 8.30 மணிவரை அவர்களை மறித்து வைத்திருந்தனர்.

பின்னர் காலை 10 மணியளவில் கட்டாந் தரையில் ஊழியர்களை அமரும்படி உத்தரவிட்ட

(10ம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகசபை குறித்த விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை பிரதமர் ரணில் புரிந்து கொண்டுள்ளார்

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகசபையை விடுதலைப் புலிகளுக்கு வழங்கினால் மட்டுமே அவர்கள் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவார்கள் என்பதை பிரதமர் ரணில் விக்கரமசிங்க நன்கு உணர்ந்துள்ளார். அவருடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது இதனை நன்கு அவதானித்துள்ளேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்கு பகுதிக்கான இடைக்கால நிர்வாக சபையொன்றை விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன் வழங்கத் தயாராக இருப்பதாக அறிவித்திருந்த போதும் அதனை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நிராகரித்தமை பற்றி கருத்துக் கூறுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், ஏற்கனவே விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு எழுதியுள்ள கடிதங்களில் சில முக்கிய விடயங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

அதாவது அரசியல் நிர்வாக அமைப்பு மற்றும் அதனுடைய கட்டமைப்பு ஒன்று தங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்டால்தான் தம்மால் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முடியும்என்பதை அழுத்தம் திருத்தமாக தெளிவுபடுத்தியிருந்தார்.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த வியாழனன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலும், மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசும்போதும், புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை வழங்கத் தாம் தயார் என்றே கூறியிருக்கிறார்.

அத்துடன், எம்மைச் சந்தித்த போது லண்டனிற்கு அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் விரைவில் சென்று அங்குள்ள சட்ட வல்லுநர்களுடன் இது சம்பந்தமாக பேச விருப்பதாகவும் மேலும், விடுதலைப் புலிகளினால் கோரப்படும் இடைக்கால நிர்வாக சபையை வடக்கு - கிழக்கிற்கு வழங்குவது குறித்து தாமும் சட்ட ஆலோசகர்கள் மற்றும சட்டமா அதிபர் ஆகியோருடன் பேசி வருவதாக தெரிவித்திருந்தார்.

எனவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை வழங்கத் தயாராக இருப்பதை நாம் இதிலிருந்து புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இதேவேளை, மொத்த அமைதி வழிமுறையை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று நோர்வேயிடம் தான் கேட்கப்போவதாக புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறியிருப்பது பற்றி பலரும் பலவிதமான கேள்விகளை எழுப்பியுள்ளார்கள். அதாவது கடந்த 9, 10 ஆம் திகதிகளில் நடைபெற்ற டோக்கியோ மாநாட்டினை விடுதலைப புலிகள் கலந்துகொள்ளாத பட்சத்திலும் ஜபபான் அரசு அதனைத் தொடர்ந்து நடத்தியது பற்றி விடுதலைப் புலிகள் அவ்வளவு அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஆனால், அவர்கள் அரசியல் ரீதியிலான ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு சம்பந்தமக அரசு ஒரு வடிவத்தை தங்களுக்குச் செயல்படுத்தி அனுப்பவேண்டும் என்பதைத் தான் இந்த மறுபரிசீலனையின் மூலமாக தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது நிலையில் இருந்து எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது ஒரே கருத்தினையே தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டியது அவர்கள் கோரும் இடைக்கால நிர்வாகசபையே தவிர வேறு எதுவும் அவர்கள் புதிதாகக் கேட்கவில்லை. இதனையே விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் கடித மூலம் அரசிற்குத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப புலிகளினால் கோரப்படும் வடக்கு -கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக அமைப்பை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொடுக்கத் தயார் என அறிவித்துள்ள நிலையில், ஜனாதிபதியின் இது தொடர்பான நிலைப்பாட்டை இன்னும் சரிவர உணர்ந்துகொள்ள முடியவில்லையே என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-10)

## மலையக தமிழ் மக்களின் உரிமைகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்

### அமைதிக் கருத்தரங்கில் சிங்களத் தலைவர்கள் வற்புறுத்தல்

(இரத்தினபுரி)

சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று கூறும்போது வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களை மட்டும் கருத்தில்கொள்ளக் கூடாது. மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அவிசாவளை நூல் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அமைதிக் கருத்தரங்கில் பேசுகையில் முன்னாள் அமைச்சர் இந்திக்க குணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார். கருத்தரங்கிற்கு மனித உரிமைகள் இயக்க - சுற்றுச்சூழல் அமைப்பின் தலைவர் வண. கோனகல சோமாலோக்க தேரர் தலைமை வகித்தார். இலங்கை போன்று பல்வேறு குழு இனங்கள் வாழுகின்ற நாடுகளில் அம்மக்கள் தமது பாரம்பரியங்களையும் சமயம், மொழி மற்றும் கலாசாரங்களை பாதுகாத்துக் கொண்டு அமைதியாக வாழ உரிமை இருக்கவேண்டும் என்று கூறிய முன்னாள் அமைச்சர், தாம் அமைச்சராக இருந்த காலத்தில் பல கோட்டப பாடசாலைகளைச் சென்று பார்த்ததாகவும் அவைகளில் பெரும்பாலும் இந்துசமயப் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்கள் இல்லாதிருபபதை அவதானித்ததாகவும் அவர்கள் புத்தமதத்தைக் கற்கும்படி வற்புறுத்தப்பட்டு வந்ததையும் அவதானித்ததாகக் கூறினார். கிறிஸ்தவப் பிளளைகளும் இதே நிலையில்தான் இருந்தார்கள். ஆனால், பௌத்த சமயப் பிள்ளைகளுக்கு சகல வசதிகளும் இருந்தன என்று அவர் மேலும் கூறினார்.

இந்நிலையில், ஒவ்வொரு நாட்டிலும் அமைதியை ஏற்படுத்த முடியும் என்று அவர் கேட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

புரிந்துணர்வு ஒப்பந்தம் யுத்தத்தை மட்டும்தான் நிறுத்தியிருக்கிறது. வேறு ஒன்றிலும் இணக்கம் ஏற்படவில்லை. புலிகள் ஒரு பலமான நிலையில் இருப்பதனாலேயே அரசு அவர்களுடன் பேச முன்வந்தது. அதேசமயம் யுத்தத் திற்கு எதிராகவும் சாதகமாகவும் இருப்பவர்கள் நாடு முழுவதும் சென்று புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராகவும் ஆதரவாகவும் பேசி தமது அரசியல் இலாபத்தை தேடிக்கொள்ள முயல்கிறார்கள். ஆரம்பத்தில் அமைச்சர் ஹக்கீம் முஸ்லிம்களுக்குத் தனிப்பிராந்தியம் வேண்டும் என்று ஒருபோதும் கேட்கவில்லை. ஆனால், அவரது கட்சியில் பிளவு ஏற்பட்டவுடன் அரசியல் இலாபத்துக்காக முஸ்லிம்களுக்கும் தனிப்பிராந்தியம் தேவையென கூறத்தொடங்கியுள்ளார்.

இக்கூட்டத்தில் தேசிய சமாதான சபையின் உறுப்பினர் அஹிம்சக்க பெரேரா பேசுகையில் கூறியதாவது,

எலலோருமே தாம் அமைதியை விரும்புவதாகவே கூறுகிறார்கள். பொது மககள் யுத்தத்தின்மூலம் அமைதியை ஏற்படுத்த விரும்புகின்றது. யுத்தம் காரணமாக தமது பொருளாதாரம் சீர்குலைந்து போயுள்ளது. எமது இளைஞர்கள் கொலை செய்யப்படுகின்றார்கள். குடும்பங்கள் அழிந்து போகின்றன. வேறு வேலை வசதியின்மையால் இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்து விடுகின்றார்கள்.

இன்று சிஹல உறுமய, ஜே.வி.பி. மற்றும் நளின் டி சில்வா போன்றவர்கள் அமைதி முயற்சியைத் திட்டித்தீர்த்து வருகிறார்கள். அவர்களின் பிள்ளைகள் மேற்கு நாடுகளில் கல்வி பயிலுகிறார்கள். கிராமியப் பிள்ளைகளுக்காக இவர்கள் முதலைக்கண்ணீர் வடிக்கிறார்கள் என்றார். மற்றும் பலர் பேசினார்கள். (பி)

### கூட்டம்

(கல்வயல்)

சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-36)


விழியின் மீது விழிப்பாயிருங்கள்

✡ சிறிய எழுத்துக்கள் எழுதப் படிக்கச் சிரமப்படுகிறீர்ளா?
✡ ஒரு விதமான தலைவலியினால் அவதிப்படுகிறீர்களா?

அப்படியாயின் நிச்சயம் கண் குறைபாடுதான் காரணம்
(பாடசாலை மாணவருக்கு விசேட சலுகை உண்டு)
எம்மிடம் வாருங்கள்! இலவச கண் பரிசோதனைகளும்
ஆலோசனைகளும் வழங்கப்படும் அத்துடன்.

✡ முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும
✡ மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

ஸிக் கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும், பல் கட்டும் இடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 222 - 2486
கிளைகள்:-
80, K.K.S. வீதி, சுன்னாகம்.
91, K.K.S. வீதி, கொக்குவில்.
(C/6294)


## டோக்கியோ மாநாட்டு அக்கறைகூட சமாதான தீர்வு விடயத்தில் இல்லை

### சனசமூக நிலையங்களின் சம்மேளனம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

சமாதானத்துக்கு எதிராகச் செயற்படும் தென்னிலங்கை சக்திகள் யாவும டோக்கியோ நிதி வழங்கும் மாநாட்டில் காட்டும் அக்கறையில் ஒரு சிறிதளவேனும் தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் காட்டப்படாதமை மிகவும் வேதனைக்குரியது.

இவ்வாறு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிபபிடப்பட்டுள்ளதாவது, கடந்தகால யுத்த அனர்த்தங்களால் ஏற்பட்ட அரசியல் பொருளாதார சமூக அழுத்தங்களோடு இடம்பெயர்ந்த வடக்கு - கிழக்கின் பெரும்பாலான தமிழ் மக்கள், அரசு புலிகளால் தோற்றுவிக்கப்பட்ட சமாதானச் சூழ்நிலையிலும் தங்கள் வாழ்விடங்கள், பொருளாதார நிலைகளில் சென்று குடியேற முடியாதவாறு இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் தடையாகவுள்ளது.

கடந்த 2002ஆம்ஆண்டு மாசி மாதம் விடுதலைப் புலிகளுடன் கைச்சாத் திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில, அரசு ஏற்றுக கொண்ட அம்சங்களை அமுல்படுத்த அரசமைப்புச் சட்டம் தடையாக இருக்கவில்லை. அப்படியானால், தனியார் காணி, கட்டடங்களை இராணுவம் சுவீகரித்துக் கொள்வது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாதது.

இந்நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும், ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்தி எடுக்கப்பட்ட முடிவுகள், அரசு தரப்பால் நிறைவேறறப்படாதது, விடுதலைப் புலிகள் இல்லையேல் பாதுகாப்பான சமாதானத் தீர்வோ அன்றி சுதந்திர வாழ்வோ தமக்குக் கிட்டாது என்ற தமிழ் மக்களின் ஆதங்கமும் தவிர்க்க முடியாததாகிறது.

அண்மைக்காலமாக விடுதலைப புலிகள் அமைப்பு நெகிழ்வுப் போக்கில் சமஷ்டிஆட்சி முறையே பரிசீலிப்பதற்கு இறங்கியது கண்டும் இயல்பு நிலையை ஓரளவிற்கேனும் அரசின் தீர்வுத் திட்டங்கள் கொண்டு வராதமை தமிழ் மக்களை மிகவும் விசனத்துக்குள்ளாக்குகிறது.

இந்நிலையில், இடைக்கால நிர்வாகம் கோரும் நிலைக்கு புலிகள் தள்ளப்பட்டதும் தவிர்க்கமுடியாததாகிறது.

சரிந்த பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்தவும், பொதுஜன ஐக்கிய முன்னணி ஜே.வி.பி. கூட்டு அரசியலால் ஆட்டங்கண்ட அரசை நிலைபெறச் செய்யவும், சமாதானச் சூழலும் அதற்கான சர்வதேச நிதி வளமும் இலங்கை அரசின் குறிக்கோளே தவிர சமாதான சகவாழ்வை விரும்பும் தமிழ் மக்களின் இயல்பு நிலையைத் தோற்றுவிக்க அரசு முனைப்புக் காட்டாதது மிகவும் வேதனையானது.

இடைக்கால நிர்வாகம், தமிழர்களுக்கு வழங்கும் சமாதானச் சூழலை இலங்கையில் ஏற்படுத்துவேன் என்ற முன்மொழிவு மூலம் பதவிக்கு வநத ஐக்கிய தேசியக் கட்சி அரசு தன் தேர்தல் கொள்கைகளை நிறைவேற்றாது இழுத்தடிப்புச் செய்வதும் சர்வதேச மட்டத்தில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதும், சர்வதேச நிதி பெறும் நாடகத்திற்காக காலங்கடத்தும் தந்திரோபாயமே.

உண்மையான இதயசுத்தியோடு சமாதானத்தை விரும்பும் அரசு தன் தேர்தல் கொள்கை களை முன்பணியாகக் கொண்டு சமாதானப் போர்வையில் சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் இறைமையை அதற்கான முன்னெடுப்புக்களை பலவீனப்படுத்துவது தவிர்க்கப்பட்டு இயல்பு நிலையை தோற்றுவிக்க இலங்கை அரசு முன்வரவேண்டும் என்பதே கோரிக்கையாகும். (தி)

# அணுவாயுதம் தயாரிப்பதில்லையென ரஷ்யாவிடம் ஈரான் உறுதியளித்துள்ளது

## அதிபர் விளாடிமிர் புடின் தகவல்

(மொஸ்கோ)

அணுவாயுதங்களைத் தயாரிப்பதில்லை என்று ஈரான் உறுதிகூறியிருப்பதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் கூறியுள்ளார்.

மொஸ்கோவில் செய்தியாளர் கூட்டத்தில் பேசிய அவர் அணு சக்தி நிலையம் ஒன்றைக் கட்டுவதில் ஈரானிற்கு ரஷ்யா உதவுவதை அமெரிக்கா குறைகூறி வருகின்றது என்று தெரிவித்த ரஷ்ய அதிபர் ஐ.நாவின் அணுவாயுத கண்காணிப்பு அமைப்பின் நிபந்தனைகளைச் செயற்படுத்தும் வகையில் எந்தவொரு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட தெஹரான் தயாராக இருக்கின்றது என்று மேலும் கூறினார்.

இதேவேளை, அணுவாயுதத் திட்டத்தைக் கைவிடவும், பயங்கரவாதிகளுக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்தவும் ஈரானை மேற்கு நாடுகள் கோரினால் அதற்கு இணக்கம் தெரிவிக்க அந்நாட்டுக்கு இரண்டு மாத கால இறுதி அவகாசம் வழங்கலாம் என்ற வகையில் பிரிட்டன் ஐரோப்பிய நாடுகளை வற்புறுத்திவருகின்றது.

இந்த அவகாசத்தை ஈரான் பயன்படுத்திக்கொண்டு திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வராத பட்சத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துடனான பெறுமதி மிக்க வணிக உடன்பாடொன்றை இழக்க நேரிடும்.

ஈரான் மீது அமெரிக்கா பெரும் நெருக்குதல்களை ஏற்படுத்திவரும் இவ்வேளையில், ஈராக் விடயத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் ஏற்பட்டிருந்த கருத்து முரண்பாடுகள் போன்ற ஒரு நிலைமை ஈரான் விடயத்திலும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் பிரிட்டன் கவனமாக இருக்கின்றது. (பி-9)

# ஈராக்–ஆப்கான் போன்று ஈரானைக் கருதவேண்டாம்

## அமெரிக்காவுக்கு ஈரானிய தலைவர் எச்சரிக்கை

(தெஹறான்)

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானைப் போன்று ஈரானைக் கருத வேண்டாம் என்று ஈரானின் சிரேஷ்ட இஸ்லாமிய தலைவர் ஒருவர் அமெரிக்காவை எச்சரித்துள்ளார்.

அத்துடன் அண்மையில் இஸ்லாமிய சட்டங்களுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்குமாறும் அவர் ஈரானாட்சியாளர்களை வலியுறுத்தியுள்ளார்.

ஈரான் அணுவாயுதங்கள் தொடர்பான அறிக்கைகளை முறையாக வெளியிடவில்லை என்று ஐக்கிய நாடுகளின் அணுவாயுத கண்காணிப்பு நிறுவனம் அண்மையில் அறிவித்திருந்தது.

இதனையடுத்தே ஈரானைத் தப்பாகக் குறைத்து மதிப்பிட வேண்டாம் என அந்த நாட்டின் அரசியல் அமைப்பு பாதுகாவலர் சபையின் உறுப்பினரான அயதுல்லா மொகமட் ஜஸ்மி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். (பி-9)



இந்தியாவின் ஆக்ராவில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற தாஜ்மகாலின் பின்புறமுள்ள ஜமுனா ஆற்றங்கரையில் வர்த்தக வளாகமொன்றை நிறுவும் பணிகளை உத்தரப் பிரதேச அரசு ஆரம்பித்துள்ளதையே இங்கு காண்கிறீர்கள். எனினும் இப்பணிகள் மத்திய அரசின் அனுமதி பெறப்படாமல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறி இத்திட்டத்தை உடன் நிறுத்துமாறு மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் ஜத்மோகன் உத்தரவிட்டுள்ளார்.

# பள்ளியில் வெடிபொருள்; விபத்தில் 10 குழந்தைகள் பலி

(அங்காரா)

துருக்கி நாட்டில் பள்ளிக்கூடத்தில் வெடி பொருள் ஒன்று வெடித்துச் சிதறியது. இதில் 10 குழந்தைகள் உடல் சிதறிப் பரிதாபமாக பலியானார்கள்.

துருக்கி நாட்டில் உள்ள கேய்செரி என்னும் நகரிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் நேற்று முன்தினம் காலை பயங்கர சத்தத்துடன் வெடி பொருள் ஒன்று வெடித்தது. இதில் அக்கட்டிடம் அதிர்ந்து இடிந்து விழுந்தது. அப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்த சுமார் 10 குழந்தைகள் இடிபாடுகளில் சிக்கி உயிரோடு புதைந்தனர். மேலும் ஏராளமான குழந்தைகளைக் காணவில்லை.

தகவல் அறிந்து மீட்புப் படை அங்கு விரைந்தது. தற்போது இடிபாடுகளில் வேறு யாரும் சிக்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கின்றனரா என்பதைக் கண்டுபிடிக்கும் பணியும் தீவிரமாக நடந்து வருகின்றது. இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சிக்கி படுகாயமடைந்த மேலும் 13 குழந்தைகள் மற்றும் ஒரு ஆசிரியரும் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவத்திற்கான காரணம் இன்னும் தெரியவில்லை. பள்ளி சமயலறையில் இருந்த வெடிக்கும் பொருள் ஒன்று வெடித்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. (பி)

# அரசியலில் உறுதி இருந்தால் அமைதிப் பேச்சுக்கு எந்த தடையுமில்லை

## பாக். வெளியுறவு அமைச்சர் நம்பிக்கை

(இஸ்லாமபாத்)

அரசியலில் உறுதியும் நம்பிக்கையும் இருந்தால் இந்தியாவும் பாகிஸ்தானும் அமைதிப் பேச்சுவார்த்தைகளை எப்பொழுது வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம் என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷீத் முகம்மது கசூரி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் நாளிதழான டெய்லி டைம்ஸிற்கு நேற்று முன்தினம் வழங்கியிருந்த விசேட பேட்டியின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்திய-பாகிஸ்தானிடையே சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான அடிப்படைத் திட்டங்கள் ஏற்கனவே தயாராகவுள்ளன. புதிதாக எதனையும் உருவாக்க வேண்டிய அவசியமில்லை. சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடருவதற்குத் தற்போது தேவைப்படுவதெல்லாம் அரசியல் உறுதிதான் என்று தனது பேட்டியின் போது கூறிய கசூரி அண்மையில் இந்தியத் தொலைக்காட்சிக்கு தான் அளித்த பேட்டியொன்றினை இந்தியப் பத்திரிகைகள் திரிபுபடுத்தி வெளியிட்டுள்ளதுடன், அது குறித்து இந்தியத் தலைவர்கள் கடுமையாக விமர்சித்து வருவதும் வருத்தத்திற்குரியது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (பி-2)

# 4 மாதங்களுக்கு வலி நிவாரணம்

## புதிய ஊசி மருந்து கண்டுபிடிப்பு

(பெய்ஜிங்)

புற்றுநோயால் ஏற்படும் வலியிலிருந்து தொடர்ந்து 4 மாதத்துக்கு நிவாரணம் தரக்கூடிய ஊசி மருந்தை சீன வல்லுநர்கள் உருவாக்கியுள்ளனர்.

இந்த ஊசி மருந்தை ஒரு தடவை உடலுக்குள் செலுத்தினால் 4 மாதங்களுக்கு வலியின் தீவிரம் கட்டுக்குள் வந்துவிடும்.

இந்த மருந்துக்கு 'ஏக்லஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. மருத்துவ ரீதியில் கடந்த ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட தொடக்க நிலை சோதனையில் நல்ல பலன் கிடைத்துள்ளது.

இத்தகவலை ஜின்குவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரைப்பை, குடல், மார்பகங்கள், நுரையீரல்கள், சிறுநீரகங்கள் போன்றவற்றில் புற்றுநோய் ஏற்பட்டு அதனால் உருவாகக் கூடிய வலியைக் கட்டுப்படுத்தும் தன்மை இந்த மருந்துக்கு உண்டு. (பி)

# இந்தியா-பாகிஸ்தானுக்கிடையில் தொடர்ந்துவரும் 'இன்டர்நெற் போர்'

(இஸ்லாமபாத்)

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே அமைதியை ஏற்படுத்த முயற்சிகள் தீவிரமாக நடந்து வருகின்றபோதிலும், இரு நாடுகளுக்கிடையே நடந்து வந்த இன்டர்நெற் போர் இன்னும் ஓயவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

WORLD NEWS உலக தரிசனம்

இந்நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க இரு நாடுகளும் முயற்சித்து வருகின்றன. இதனால் இரு நாடுகளுக்கிடையே சுமுகமான சூழ்நிலை உருவாகி வருகிறது. இரு நாடுகளிடையே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் போக்குவரத்து மீண்டும் தொடங்கப்படவுள்ளது. ரயில் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இரு நாடுகளிடையே அமைதியை ஏற்படுத்த இவ்வளவு முயற்சிகள் நடந்துவருகின்ற போதிலும் கூட கடந்த பல வருடமாக இந்த நாடுகளிடையே மறைமுகமாக நடந்து வரும் இன்டர்நெற் போர் இன்னும் நின்றபாடில்லை. தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது என செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.


இதுவரை சுமார் 546 இந்தியன் வெப்சைட்டுக்களை பாகிஸ்தானின் வெப்சைட் முடக்குவோர் செயலிழக்கச் செய்துள்ளனர். கடந்த வருடத்தை காட்டிலும் இந்த வருடம் இது மிகவும் அதிகமாகும். கடந்த வருடம் வெறும் 288 வெப்சைட்டுக்கள் மட்டும் செயலிழக்கச் செய்யப்பட்டன. இதற்குப் பதிலடியாக இந்திய வெப்சைட் முடக்குவோரும் ஏராளமான பாகிஸ்தான் வெப்சைட்டுக்களை செயலிழக்கச் செய்து வருகின்றனர். இன்டர் நெற் மோதலில் இந்தியத் தரப்பில் காஷ்மீரில் இயங்கும் இராணுவம் மற்றும் அதனது நடவடிக்கைகள் குறித்த தகவல் அடங்கிய இந்திய அரசின் வெப்சைட் ஒன்று பலியாகியுள்ளது. இதேபோல் பாகிஸ்தானில் அந்நாட்டின் ஏற்றுமதி வாரியம் மற்றும் தேசிய புனரமைப்புத் துறை உள்ளிட்ட பல துறைகளின் வெப்சைட்களும் இந்த மோதலில் முடக்கப்பட்டுள்ளன. வெப்சைட்களை முடக்குவோர் பெரும்பாலும் 17 வயதிலிருந்து 24 வயதிற்கிடைடைப்பட்டவர்கள் என நம்பப்படுகின்றது. இந்தியன் வெப்சைட்களை முடக்கு வதற்காகவே பாகிஸ்தானில் ஒரு அமைப்பே உருவாக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. (பி)

# கோவையில் மீண்டும் தொடர் குண்டு தாக்குதலுக்குத் தீவிரவாதிகள் திட்டம்

## மத்திய-மாநில உளவுப்பிரிவு உஷார்

(சென்னை)

தமிழ் நாட்டில் கோவை நகரில் மீண்டும் தொடர் குண்டுத் தாக்குதலை நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக மத்திய மாநில உளவுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



அமெரிக்காவின் பச்சை குத்தும் ஓவியர் ஒருவர் தனது நாக்கைப் பாம்பின் நாக்கைப் போன்று வெட்டிக் கொள்கின்றார். அதி தீவிர உடலுறுப்பு மாற்றம் என்ற பெயரில் அமெரிக்க விடலைகளிடையே நாக்கை வெட்டும் இந்நாகரிகம் பரவி வருகின்றது.

1998ஆம் ஆண்டு கோவையில் மலையாள தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதலைப் போன்று இத்தாக்குதல்களும் இடம்பெறலாம் எனவும்,

இந்த நடவடிக்கைகளுக்காக மலையாள இளைஞர்களை அதிகளவில் திரட்டி பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் தமிழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று கிடைத்த தகவல்களை அடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கோவையில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ள போதிலும் மக்கள் மத்தியில் அச்சம் அதிகரித்துள்ளது.

இதேவேளை, கோவையில் 1998ஆம் ஆண்டு இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

# சர்ச்சைக்குரிய 'சண்டியர்' குறித்து நடிகர் கமல்-ஜெயலலிதாவுடன் சந்திப்பு

## படத்தின் பெயரை மாற்ற கமல் முடிவு

(சென்னை)

மக்கள் மத்தியில் இன மோதல்களைத் தோற்றுவிக்கும் வகையில் தயாரிக்கப்படுவதாக கூறப்படும் 'சண்டியர்' திரைப்படத்தினால் ஏற்பட்டுள்ள சர்ச்சைகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் நடிகர் கமலஹாசன் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார்.

கமலஹாசன் நடித்து இயக்கி வரும் சண்டியர் திரைப்படத்தினால் சாதிக் கலவரங்கள் தோன்றும் எனக் குற்றஞ்சாட்டிய புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி இத்திரைப்படத்தின் பெயரை மாற்றியமைக்க வேண்டுமெனவும் அவ்வாறு மாற்றியமைக்கப்படவில்லையெனின் அதற்கெதிராக மறியல் போராட்டங்கள் நடத்தப்படுமென்றும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்து தனது படப்பிடிப்புக்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு கமலஹாசன் கோரியிருந்தார்.

அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டதையடுத்தே கமலஹாசன் முதலமைசசரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இதன்போது தனது சண்டியர் திரைப்படம் இன மோதல்களைத் தோற்றுவிப்பதற்காக தயாரிக்கப்படவில்லை என ஜெயலலிதாவிற்கு தெளிவுபட எடுத்துக்கூறியுள்ள கமலஹாசன் தனது படத்தின் பெயரை மாற்றியமைக்க முடிவு செய்திருப்பதாகவும் கூறியுள்ளார். (பி-2)

## இன்னு ஒரு தகவல்

# ஞானம் வந்த விதம்

ஒரு மாடி வீட்டில் ஒரு பெரிய மனிதன் இருந்தார். மிகவும் விலை உயர்ந்த கார் ஒன்று வைத்திருந்தார் வெளிநாட்டுக் கார். எங்கே போனாலும் அதிலே தான் போவார், வருவார். அவ்வளவு வசதி. அப்பேர்ப்பட்டவர் ஒரு நாள் திடீரென்று செத்துப் போய் விட்டார். அதன் பின்னர் அவரைப்பற்றி அடுத்த ஊரில் இரண்டு பேர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் ''அந்தப் பெரிய மனிதர் இருந்தாரே... அவர் இந்த உலகத்தை விட்டுப்போய் விட்டார்'' என்று சொன்னார். இன்னொருவர் எதிலே போனார்? அவரின் காரிலேதானே! என்று சொன்னார். இதைக்கேட்டதும் மற்றவருக்குச் சிரிப்பு வந்து விட்டது.

உலகத்தை விட்டுப் போகிறபொழுது என்னத்தை எடுத்துக்கொண்டு போக முடியும்? எல்லாவற்றையும் விட்டு விட்டுப் போக வேண்டியது தான். அதனால் இயற்கை எல்லாவற்றையும் ஒரே மாதிரியாகத் தான் உலகத்துக்கு அனுப்புகிறது. அதில் சின்ன மனிதன், பெரிய மனிதன் என்கின்ற வித்தியாசம் இல்லை. வித்தியாசங்கள் இவர்களாக ஏற்படுத்திக் கொள்வது தான். நான் பெரியவன், நீ பெரியவன் என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஞானம் வரும் போது இந்த வித்தியாசம் மறையும்.

ஒரு ராஜா இருந்தார். தான் ஒரு ராஜா என்கிற நினைப்பு எப்போதும் அவருக்கு உண்டு. அந்த ராஜாவும், ராணியும் ஒரு நாள் வெளியில் எங்கேயோ போயிருந்தார்கள். அந்த அரண்மனையில் ஒரு வேலைக்காரி! அந்தப்பெண்ணுக்கு அரசருடைய மஞ்சத்தைத் தயார் பண்ணுவது தான் வேலை. ஹம்ச தூளிகா மஞ்சம். அந்தப் படுக்கையைத் தயார் பண்ணுவதென்றால் அது சாதாரண வேலையில்லை. அதற்குக் கிட்டத்தட்ட நாலு மணி நேரம் ஆகுமாம்! ராஜா தூங்கு வதென்றால் சும்மாவா? முதலில் ஒரு ஜமுக்காளத்தை விரிக்க வேண்டும். அதற்கு மேல் ஒரு மெத்தையை விரிக்க வேண்டும். அதற்கு மேலே காம்பு இல்லாத மலர்களைத் தூவ வேண்டும். இப்படி ஏழு அடுக்குகள் உண்டாக்கி அந்தப் படுக்கையைத் தயார் பண்ண வேண்டுமாம். வழக்கம் போல் அன்றைக்கும் அந்த வேலைக்காரப் பெண் அந்த மஞ்சத்தைத் தயார் பண்ணினாள்!

வெளியே போயிருக்கிற ராஜாவும், ராணியும் இன்னும் திரும்பி வரவில்லை! ''அவர்கள் வருவதற்குள் நாமும் ஒரு ஐந்து நிமிடம் படுத்துப்பார்த்தால் என்ன?'' என்று ஒரு ஆசை. ஐந்து நிமிடந்தானே என்று நினைத்து அந்த வேலைக்காரப் பெண் அதில் ஏறிப்படுத்துப் பார்த்தாள். ஆனால், பாவம் அதிலே சுகமாகப் படுத்ததும் தூக்கம் வந்து விட்டது. அயர்ந்து போய்க் குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பித்து விட்டாள். நாலுமணி நேரம் கழித்து அரசனும், அரசியும் திரும்பி வந்தார்கள். வந்து பார்த்தால், அழுக்கு உடையோடு அந்த வேலைக்காரப் பெண் அரசனுடைய படுக்கையில் படுத்திருக்கிறாள். ராஜாவுக்குக் கோபம் வந்து விட்டது. நாம் எங்கே? இந்த வேலைக்காரி எங்கே? என்கிற நினைப்பு வந்து விட்டது.

உடனே கையைத் தட்டிக் காவலாளிகளைக் கூப்பிட்டார். அந்த வேலைக்காரியை ஒரு தூணிலே கட்டி வைத்துச் சாட்டையால் அடிக்கும்படி உத்தரவு போட்டார். அப்படியே செய்தார்கள். சாட்டையடி பட்ட வேலைக்காரி அழவேண்டும் அல்லவா? அழவில்லை! ஒவ்வொரு அடிக்கும் அந்தப் பெண் சிரிக்க ஆரம்பித்து விட்டாளாம். ராஜாவுக்கு இதைப்பார்த்ததும் ஆச்சரியமாகப் போய்விட்டது! அந்தப் பெண்ணைப் பார்த்து ''அழாமல் சிரிக்கிறாயே ஏன்?'' என்றுகேட்டிருக்கிறார். அதற்கு அந்தப் பெண் ''அதற்கில்லை உங்கள் படுக்கையில் நாலு மணி நேரம் படுத்ததற்கே எனக்கு இத்தனை சவுக்கடி கிடைக்கின்றதே ! வாழ்நாள் முழுவதும் அந்தப் படுக்கையில் படுத்த உங்களுக்கு எத்தனை சவுக்கடி கிடைக்கப் போகிறதோ என்று நினைத்தேன் அது தான் சிரிப்பு வந்து விட்டது'' என்றாளாம்.

அதைக் கேட்டதும் தான் ராஜாவுக்கு அறிவு வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது. மனது மாறியது. தன்னுடைய செயலுக்காக வருத்தப்பட்டார். அந்தப் பெண்ணை விடுதலை பண்ணினார். அரசனுக்கு ஞானம் பிறந்த கதை இது!

இந்தக் கதையை ஒரு சின்னப் பையன் கேட்டான். அவனின் வீட்டில் அவன் அம்மா லட்டு தயார் பண்ணி ஒரு டப்பாவில் போட்டு வைத்திருந்தார். திடீரென்று பத்து லட்டுகள் காணாமல் போய் விட்டன. பையன் ஒரு லட்டை சாப்பிட்டுக்கொண்டு இருக்கிற பொழுது அவனின் அம்மா கையும் களவுமாகப் பிடித்து விட்டார். '' லட்டைத் தெரியாமல் திருடிச் சாப்பிடுவது தப்பு. அதற்குத் தண்டனையாக ஒரு லட்டுக்குப் பத்துத் தோப்புக் கரணம் வீதம் போடு'' என்றார். பையன் காதைப்பிடித்துக் கொண்டு இருபது தோப்புக்கரணங்கள் போட்டான். மீதி எண்பதும் எங்கே என்று கேட்டார் அம்மா! அவற்றைப்போடவேண்டியது நான் இல்லை! அப்பா''! என்றான் பையன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சுமார் ஏழரை இலட்சம் தென்னைகள்

## யுத்தத்தால் முற்றாக அழிப்பு

(கொழும்புத்துறை)

கடந்த கால யுத்தங்களால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள 236 கிராம சேவகர் பிரிவுகளில் சேகரிக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் படி அப்பகுதிகளில் 17 ஆயிரத்து 119 ஏக்கர் நிலத்தில் இருந்த 7 இலட்சத்து 55 ஆயிரத்து 870 தென்னைமரங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 107 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள 3 ஆயிரத்து 562 ஏக்கர் நிலத்தில் ஒரு இலட்சத்து 95 ஆயிரத்து 294 தென்னை மரங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் பளைப் பிரதேசத்தை உள்ளடக்கியுள்ள 52 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள 8 ஆயிரத்து 544ஏக்கர் நிலத்தில் 3 இலட்சத்து 58ஆயிரத்து 155 தென்னை மரங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 77 கிராமசேவகர் பிரிவுகளிலுள்ள 5 ஆயிரத்து 11 ஏக்கர் நிலத்தில் 2 இலட்சத்து ஓராயிரத்து 421 மரங்களும் கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் அழிக்கப்பட்டுள்ளன.

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதி மக்களாலும் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாலும் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இது கணிப்பிடப்பட்டுள்ளது.

ஆனாலும், யுத்த அனர்த்தங்களால அழிக்கப்பட்ட தென்னை மரங்களைப் பற்றிய புள்ளி விபரங்கள் இதை விட அதிகமானதென்றும் அத்தரவுகளைப் பெற பிறிதொரு முயற்சி நடைபெற்று வருவதாகவும் தெங்குப் பயிர்ச் செய்கையின் வட பிராந்திய முகாமையாளர் சி. சிவச்சந்திரன் தெரிவித்தார். (உ-51)

# இலங்கையில் அதிகரிக்கும் வன்முறைகள்

# இரு வாரத்துள் மட்டும் 44 படுகொலைகள்

## பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போதை வஸ்துப் பாவனை, பெண்கள் மீதான பாலியல் வன்முறை, படுகொலைகள் மிக அதிகளவில் இடம்பெற்று வருவதாக பொலிஸ் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த இரு வார காலத்துள் மட்டும் 44 படுகொலைகள் மற்றும் 46 இற்கும் மேற்பட்ட பெண்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அனுராதபுரம், இரத்தினபுரி, கம்பஹா, பேலிய கொட போன்ற இடங்களிலேயே பெண்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் கூடுதலாக இடம்பெற்றுள்ளன.

இதேவேளையில், வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் பலர் போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுள் பெருமளவினர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்வதில் பொலிஸ் திணைக்களம் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# குற்றங்களை கட்டுப்படுத்துவது

# இலகுவான விடயமல்ல

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)



அதிகரித்து வரும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவது இலகுவான விடயமல்ல என அரசியல் விவகார அமைச்சர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய கைப்பணிப் பேரவையின் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசுகையில், இன்றைய சமுதாயத்தில் படுகொலைகள், கொள்ளை என்பன சமுதாயத்தில் சிக்கல்களுக்குரிய பிரச்சினைகளாக உருவெடுத்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்த பொலிஸ் சேவையை விஸ்தரித்தல் மற்றும் மரண தண்டனையை மீண்டும அமுல்படுத்தல் என்பன போதுமானதாக அமையாது.

தற்போது ஏற்பட்டுள்ள சமூகப் பிரச்சினைகளுக்கு மனச் சமநிலை இன்மையே காரணம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அதிகரித்துவரும் குற்றச் செயல்களை. கட்டுப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் விசேட பொலிஸ் பிரிவினை அமைத்துள்ளதுடன், மரண தண்டனையை அமுல்படுத்துவது குறித்தும் ஆராய்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (தி)

## இராசி பலன்

22,06. 2003

(ஆனி 08, ஞாயிறு)

அட்டமி பி.ப 12.54 வரை

உத்தரட்டாதி மு.இ.0 9.07வரை

இராகுகாலம்- 4.24-5.54

சுபநேரம்- 8.54-10.24

அட்டமி நவமி

**மேடம்**
அமைதிக்குறைவு, காரிய அலைச்சல், திடீர் நன்மை, போசன சுகம்.

**இடபம்**
கௌரவமான நிலை, எடுத்த காரியம் கைகூடும், தொழில் நிலையில் மாற்றம், குடும்ப சுகம்.

**மிதுனம்**
நல்ல செய்தி, முயற்சி கைகூடும், அதிகாரம், தெய்வ சிந்தை.

**கடகம்**
புதிய சிந்தை, கட்டுப்பாடு, மனப்பயம், காரிய தாமதம்.

**சிங்கம்**
எதிர்பாரத அச்சம், தொழிலில் ஆர்வம், முயற்சி கைகூடும், பிரயாணம்.

**கன்னி**
எடுத்தகாரியம் கைகூடும், தெய்வசிந்தை, தொழில் விருத்தி, குடும்ப மகிழ்ச்சி.

**துலாம்**
அரோக்கிய நிலை, பிறருக்கு உதவுதல், புதிய திருப்பம், முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**
தொழில் சிந்தை, குடும்பத்தில் புதிய நிகழ்வு, எடுத்த காரியம் தாமதமாகும், கற்பனை மிகுதி.

**தனுசு**
திடீர் நன்மை, தாய்வழி உறவு, எண்ணங்கள் தாமதமாகும், மனச் சோர்வு.

**மகரம்**
எடுத்த காரியம் கைகூடும், நல்ல நிகழ்வு, சுவாரஸ்யம், உறவினர் வருகை.

**கும்பம்**
ஆழ்ந்த சிந்தை, தன விரயம், காரிய தாமதம், வீண் பகை.

**மீனம்**
தெய்வானுகூலம், விருத்தபசாரம், எடுத்த கருமங்கள் கைகூடும், நல்ல பிரயாசை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# கொழும்பு பிரதிமா நகர முதல்வருக்கு எதிராக நீதிமன்றில் முறைப்பாடு

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபையின் பிரதி நகரமுதல்வர் அசாத் சாலியின் நியமனத்துக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பாக பிரதிவாதிகள் அடுத்தமாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக அறிக்கையை சமர்பபிக்க வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

C S ஊராட்சித் தேர்தல்கள் சடடத்தின் அடிப்படையில் கொழும்பில் வாழும் பிரஜை ஒருவரை மாநகர சபையின்அங்கத்தவராக நிமிக்க முடியும் என பிரதிவாதியான முஹமட் காசி தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

பிரதி நகரமுதல்வர் கொழும்பில் வசிக்காதபடியால் அந்தப பதவியை வகிப்பதற்கு சப்பூர்வ உரிமையை அவர் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## சபாநாயகர் நேற்று முன்தினம்

# பொ. ஐ. மு. பொதுச் செயலரை அவையை விட்டகல உத்தரவு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம். ஜெயரட்ணாவை பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறுமாறு சபாநாயகர் யோசப் மைக்கல பெரேரா நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் மு.ப. 10 மணிக்கு கூடிய போது பாராளுமன்ற உறுப்பினர் சபாநாயகரின் உத்தரவுக்கு அடி பணியாது தொடர்ந்து அவையில் உரையாற்றினார்.

அவ்வேளை, கடந்த இரு தினங்களாக நாடாளுமன்றத்தில் இடம் பெற்று வந்த பொட்டலம் மற்றும் சவப்பெட்டி விடயங்கள் குறித்து அமைசசர்களான மகிந்த சமரசிங்க, ஏ.எச். எம். அஸ்வர் ஆகியோர் சபையில் உரையாற்றிக் கொண்டிருந்த வேளையிலும், பாராளுமன்ற உறுப்பினர் அவ்வுரைகளை இடைமறித்து உரையாற்றினார்.

உறுப்பினரின் இந் நடவடிக்கைகளைக் கண்காணித்த சபாநாயகர், அவரை நாடாளுமன்ற அமர்வுகளிற்கு ஏற்றவாறு நடந்துகொள்ளுமாறு எச்சரித்தார்.

சபாநாயகரின் எச்சரிக்கையினையும் மீறி, நாடாளுமன்ற சட்டதிட்டங்களை மீறி நடந்துள்ளதால் சபாநாயகர் அவரை அவையில் இருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளார். (தி)

# குழந்தைச் செல்வம் இல்லாத குறையை நீக்கும் செயற்கைமுறை

குழந்தையின்மை என்பது கணவன மனைவி இருவரையும் பாதிக்கும் பொதுவான பிரச்சினை என்றாலும் பெண்களையே அதிகம் பாதிக்கிறது. மலடி என்ற முத்திரையுடன் குழந்தை பிறக்காமைக்கு பெண்களே காரணமாக ஆக்கப்படுகிறார்கள். ஆனால், இருவரும் பொறுப்பாளிகள் என்பது தான் உண்மை. குழந்தை இல்லாத தம்பதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகினறது. ஒரு வருடத்துக்குள் கர்ப்பம் தரிக்காத நிலையில் உடனடியாக மருத்துவரைக் கலந்தாலோசிக்க வேண்டும். குறிப்பாக இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவரைச் சந்திப்பது மிகுந்த பலனைத் தரும்.

### இயற்கையாக கருவுறுதல்

மாதவிலக்கின் சுழற்சியின்போது சினை முட்டைகள் வெளியேறி புத்தம் புது சினை முட்டைகள் உருவாகும். இந்தச் சினை முட்டைகள் மாதவிலக்கின் ஏழாவது நாள் தொடங்கி இருபத்தி ஓராவது நாள் வரை விந்துவின் உயிரணுக்களுக்காக காத்துக் கிடக்கும். ஆண் விந்துவில் இருக்கும் கோடிக்கணக்கான உயிரணுக்களில் ஏதேனும் ஒன்று இந்தச் சினை முட்டைக்குள் தஞ்சம் அடையும் பட்சதில் பெண் கருவுறுகிறாள். குறிப்பாக மாதவிலக்கான 12 ஆவது நாள்முதல் 18 ஆவது நாள்வரை கருத்தரிக்க வாய்ப்புகள் அதிகம் உள்ள நாட்களாகும்.

20 வயதில் இருக்கும் பெண் திருமணம் ஆன நாளிலிருந்து இடைவிடாத உடலுறவுகொள்ளும் பட்சத்தில் ஒரு வருடத்திற்குள் கருத்தரிக்க வேண்டும்.

புள்ளி விவரங்களின்படி 75 சதவீதம் பெண்கள் ஒரு வருடத்திற்குள் கருவுறுகிறார்கள். அவர்கள் ஆசைப்படும் அளவிற்கு குழந்தைகளையும் அவர்களால் பெற்றுக்கொள்ள முடியும்.

20 சதவீதம் பெண்களில் 15-20 சதவீதம் தாங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு குழந்தைகளை பெற்றுக் கொள்வதில் சிரமப்படுவார்கள். முதல் குழந்தைக்கே படாதபாடு படவேண்டியிருக்கும். மீதமுள்ள 5 சதவீதம் பெண்கள் செயற்கை முறையில் மட்டுமே கருவுற முடியும்.

### பாதுகாப்பான நாட்கள்

மாத விலக்கிற்கு மூன்று நாட்கள் முன்போ, மாதவிலக்கான மூன்று நாட்களுக்குப் பின்போ உடலுறவு கொண்டால், கருத்தரிக்கும் வாய்ப்புகள் மிகமிகக் குறைவு.

இந்நாட்கள் 'பாதுகாப்பான நாட்கள்' (Safe Periods) என்று அழைக்கப்படுகின்றன. கர்ப்பத்தடை மாத்தரைகளையோ, உபகரணங்களையோ பயன்படுத்தாத பட்சத்தில் குழந்தை வேண்டாம் என்று நினைப்பவர்கள் இந்த நாட்களில் உடலுறவு கொண்டால் கர்ப்பம் தரிக்காது.

### மலட்டுத்தன்மை

ஒரு பெண் கர்ப்பம் தரிப்பதில் அவளது சினைக் குழாய்கள்தான் முக்கியப் பொறுப்பு வகிக்கின்றன. ஆனால், சினை முட்டைகள் உருவாகாமல் போனாலோ அல்லது தொற்றுநோய் மற்றும் தேவையற்ற கொழுப்புகளினால் சினைக்குழாயில் சதைத்திரட்சி ஏற்பட்டு அடைப்பு ஏற்பட்டாலோ பெண் கருத்தரிப்பில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

### ஆண்மை இல்லாத நிலை

இவ்வகை சிகிச்சையில் ஆண் விந்து முக்கிய பங்களிக்கிறது. எனவே, ஆண் எவ்விதக் கோளாறும் இல்லாமல் கணிசமான அளவு விந்துவை வெளியேற்ற வேண்டும். விந்து நீர்த்துப் போகாமல் கெட்டியாக இருத் தல் அவசியம். அதிகஎண்ணிக்கையில் உயிரணுக்கள் இருந்தாலும், அவை சினை முட்டையை சென்றடைய நீந்தும் தன்மை கொண்டிருத்தலும் மிக முக்கியம். ஆண் விந்துவின் மாறுபட்ட உருவ அமைப்பும், பெண்களின் கருப்பை அகப்படல அழற்சியும் குழந்தையின்மைக்கு காரணியாக அமையலாம்.

### கருப்பையில் செயற்கை முறையில் விந்து செலுத்துதல்

ஆண் விந்து சினை முட்டைக்குள் நுழையும் நிகழ்வு இயற்கையாக நடைபெற வேண்டும். சினை முடடைகள் உருவாகாத நிலையில் ஹர்மோன்கள் மூலம் அவற்றை உருவாக்கி விந்துவை உள்ளே செலுத்துதல் சிகிச்சை அளிக்கப்படுகிறது. சினை முட்டைகள் உருவாக்கத் தேவையான மருந்து மாத்திரைகளை உட்கொள்ளும் போதும், சிகிச்சையை எடுத்துக் கொள்ளும்போதும், பக்கவிளைவுகள் ஏற்படாவண்ணம் மிகக் கவனமாக பார்த்துக்கொள்ளப்படுகிறது. இந்நிலையில் ஆண் விந்துவை தனியாகப் பிரித்தெடுத்து செயற்கை முறையில் பெண்ணின் சினை முட்டைக்குள் செலுத்தும் செயற்கை சிகிச்சை முறைக்கே Intrauterin Insemination - IUI என்று பெயர்.

### பரிசோதனைகள்

குழந்தையின்மையைப் பரிசோதிக்க பல சிகிச்சை முறைகள் உள்ளன. இவற்றின் மூலம் பிள்ளைப்பேறு இல்லாத காரணத்தை தெரிந்துகொள்ள முடியும். சினை முடடை, கருப்பைக்குழாய், ஹார்

**டாக்டர் கீதா ஹரிப்பிரியா**

மோன், விநது, உயிரணு ஆகியவற்றைப் பரிசோதிப்பதன்மூலம் மலட்டுத் தன்மைக்கான காரணங்களை ஓரளவு கண்டுபிடிக்க முடியும். பரிசோதனைகள் முடிந்து இச்சிகிச்சையை மேற்கொள்ளும போது ரத்தத்தில் பெண்மை இயக்கு நீரான ஈஸ்ட்ரோஜன் அளவில் சரியான விகிதத்தில் உள்ளதா என்றும், சிகிச்சைமூலம் சினை முட்டைகள் முதிர்ச்சி அடைகிறதா என்பதும் அடிக்கடி பரிசோதிக்கப்படுகிறது.

சுரப்புத்திசு (Follioles) வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. சிகிச்சையின்போது இரண்டு அல்லது மூன்றுமுறை அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் சோதனை செய்யப்படுகிறது. அதன் பின் ஆண்விந்து பாதுகாப்புடன் சேகரிக்கப்பட்டு நன்கு சுத்திகரிக்கப்பட்ட நிலையில் நேரடியாக கருப்பையில் செலுத்தப்படுகிறது.

### பிரச்சினைகள்

இவ்வகை சிகிச்சைகள் பக்க விளைவுகளையும், பிரச்சினைகளையும் ஏற்படுத்தாது என்றாலும், தொற்றுநோய்கள் அணுகாத வண்ணம் பாதுகாப்புடன் இருத்தல் மிக அவசியமாகிறது. சுரப்புத்திசுக்கள் 14 மி.மீ அளவிற்கு மேல் வளரும் பட்சத்தில் குறைப் பிரசவமோ அல்லது எடை குறைவான குழந்தையோ பிறப்பதற்கான சாத்தியக்கூறுக்ள் அதிகம். எனவே, சிகிச்சையின் போது அனைத்தும் கவனமுடன் மேற்பார்வையிடப்படுகிறது.

இதுபோன்ற பிரச்சினைகள் தோன்றாமலிருக்க சிகிச்சையளிக்கப்படும் மருத்துவமனையிலேயே விந்து வெளியேற்றப்பட்டு வழங்கப்பட வேண்டும. வேறு இடத்தில் என்றால் வெளியேற்றப்பட்ட 30 நிமிடங்களில் விந்து மருத்துவமனையை அடைந்து விட வேண்டும். இச்சிகிச்சை 10-25 சதவீதம் வெற்றியைத் தரும். தொடர்ந்து 4-6 மாதங்களுக்கு கருத்தரிக்கும்வரை இச்சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். மேலும், இச்சிகிச்சைக்கு மருத்துவரைச் சந்திக்கச் செல்லும் போது உடன் விந்து பரிசோதனை அறிக்கை உட்பட அனைத்து ஆவணங்களுடனும் செல்வது மிக நல்லது.

---

## பிரிட்டனில் அடுத்தடுத்து கொலை

# இலங்கையர் குழுவைத் தேடி துப்பறியும் நிபுணர்கள் வலைவிரிப்பு

(கொழும்பு)

பிரிட்டனின் வடக்கேயுள்ள வெம்லி பிரதேசத்துக்குள் ஒரு மணித்தியாலத்துக்குள் இரண்டு கொலைகளைப் புரிந்த இலங்கையர் குழுவைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் துப்பறியும் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் கோடரி, வாள், உடைந்த போத்தல் ஆகியவற்றைப் பயன்படுத்தியே இக்கொலைகளைச் செய்துள்ளனர்.

இம்மாதம் 2 ஆம் திகதி பிரதீபன் பாலசிங்கம் என்ற 23 வயதுடைய இளைஞர் பாம்பீச் உணவகம் முன்பாக ஐந்து நபர்களால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 5 நாட்களின் பின் உயிரிழந்தார்.

இரண்டாவது நபரான 18 வயதுடைய கிசோக்குமார் பாலச்சந்திரன் என்பவரின் முகம், கழுத்து போன்ற இடங்களில் கடுங்காயம் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதித்து சில மணித்தியாலங்களின் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இக்கொலைகளைப் புரிந்திருக்கும் குழுவினரால் மேலும் வன் செயல்கள் அதிகரிக்கலாமென லண்டன புலனாய்வு அதிகாரிகள் அச்சம் கொண்டுள்ளதையடுத்தே இத்தேடுதல் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

(உ-8)

# தவறவிடப்பட்ட அ. அட்டைகள் சிறு குற்றத் தடுப்புப் பிரிவில்

## உரியவர் பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் தவற விடப்பட்ட அடையாள அட்டைகள் சில யாழ். பொலிஸாரின் சிறு குற்றத்தடுப்புப் பிரிவில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின்வருவோரின் அடையாள அட்டைகளே யாழ். பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

✦ பொ.கனகலிங்கம் - கொட்டடி. ✦ சி.தனலெட்சுமி - வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம். ✦ க.சுந்தரேசன் - பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். ✦ த.இரத்தினராஜா - புங்குடுதீவு மேற்கு. ✦ பெ.சசிதா - 8ஆம யூனிற் தர்மபுரம், கிளிநொச்சி. ✦ சி.நல்லம்மா - சாந்தா தோட்டம், புலோலி, பருத்தித்துறை. ✦ சி.சுதாகரன் - ஓட்டுமடம், யாழ்ப்பாணம். ✦ வி.தணிகாசலம் - சிவன கோவிலடி, புத்தூர். ✦ அ.சிவபாலன் - மணற்பிட்டி, காரைநகர். ✦ த.இரவீந்திரன் - கோண்டாவில். ✦ சீ.மணிபல்லவன் - ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி.

இவர்களை யாழ். பொலிஸ் நிலையத்திற்கு வந்து அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-4)

# விஞ்ஞானிகள் பட்டியலில் சேர் ஆதர் சி.கிளார்க்

(கொழும்பு)

கடந்த காலங்களிலும் தற்காலத்திலும் விண்வெளித்துறையில் சாதனைகள் பல புரிந்த முன்னோடிகள் 100 பேர் கொண்ட பட்டியலில் இலங்கை விஞ்ஞானி ஆதர் சி.கிளார்க்கும் சேர்க்கப்பட்டுள்ளார். வானியல் தொடர்பான ஏவியேசன் என்னும் அமெரிக்க சஞ்சிகை ஒன்று இது தொடர்பான கருத்துக் கணிப்பொன்றை நடத்தியிருந்தது.

விண்வெளி மற்றும் வானியல் துறை சார்ந்த பல கண்டுபிடிப்பாளர்களினதும், நிபுணர்களினதும் பெயர்களை இப்பட்டியல் கொண்டுள்ளது. மறைந்த லியனார்டோ டாவின்சி போன்று ஆர்தர் சி.கிளார்க்கும் சிறந்த விண்வெளி சம்பந்தமான புனை கதை எழுத்தாளர்களில் ஒருவராக தலைசிறந்த 100 பேர் கொண்ட பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றார். இவர்களை விட மனிதனின் விண்வெளி தொடர்பான சாதனைகளுக்கு முன்னோடியான ரைட் சகோதரர்கள், யூரி ககாரின், நீல் ஆம்ஸரோங் போன்றோரும் அடங்குவர். இப்பட்டியலில் தன்னைச் சேர்த்துக் கொண்டதால் தான் கெளரவப்படுத் தப்பட்டிருப்ப தாகக் கூறும் ஆர்தர் சி.கிளார்க், மேலும் பல வானியலாளர்களுடன் தன்னையும் ஒருவராக சேர்த்ததற்கு பெரும் மகிழ்ச்சியடை வதாகவும் கூறியுள்ளார். இப்பட்டியலிலுள்ள வானியலாளர்கள் பலரை தான் சந்தித்திருப்பதாகவும் மேலும் பலர் இதில் இணைய வேண்டுமென தான் விருப்பம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்(ந)

## தொலைந்த வாகன ஆவணங்களின்

# முறைப்பாட்டுப் பிரதிகளை உடன் பெற முடியாது

(யாழ்ப்பாணம்)

வாகன ஓட்டுனர் உரிமம் மற்றும் காப்புறுதிப்பத்திரம் ஆகியவற்றைத் தவறவிட்டவர்கள் உடனடியாக முறைப்பாட்டுப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாது என யாழ். போக்குவரத்துக் கண்காணிப்புப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தவறிய ஆவணங்கள் சிலவேளைகளில் மீண்டும் கிடைக்கலாம் என்பதன் காரணமாக, இப்பிரதிகளை விண்ணப்பித்து ஒருவார காலத்துக்குப் பின்னரே பெற்றுக் கொள்ளலாம் என பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

திருட்டுத் தனமாக இவ் ஆவணங்களை பயன்படுத்துவோரைக் கட்டுபபடுத்தவே இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-4)

## கிருமிநாசினி வாடையால் வந்தது வினை!

# நூற்றுக் கணக்கான ஆடைத் தொழிலக ஊழியர்கள் மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதி

(கொழும்பு)

ஜா-எல ஏர்கலவில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் 200 ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நுளம்பு போன்ற பூச்சி வகைகளைக் கொல்வதற்கு உபயோகிக்கப்படும் கிருமிநாசினியில் இருந்து வெளியேறிய காற்றை சுவாசித்தமையால இவர்கள் அனைவரும் மயக்கமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களில் 48 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 156 தொழிலாளர்களில் அரைவாசிக்கு மேலானோர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக இத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு பூரணமான சிகிச்சைகள் அழிக்கப்படவில்லை எனவும், இருப்பினும் இவ்விரு வைத்திய சாலைகளிலும் ஒருசில மருத்துவ தாதிகளே இவர்களுக்கு சிகிச்சை அளித்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

(தி)

## 180 கோடி செலவில்

# தெற்கில் நவீன துறைமுகம்

(கொழும்பு)

கொழும்பு தெற்கில் நவீன துறைமுகதகை அமைப்பதற்கான ஆலோசனைச் சேவைகளை பெற்றுக் கொள்வதற்குரிய உடன்படிக்கை, அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் துறைமுக அபிவிருத்தி அதிகார சபையில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

அமைச்சரின் மேற்பார்வையின் கீழ் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனைகளை வழங்க பிரிட்டனின் ஹொாட்வில்சன் சேச் பற்றிக் நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

12 துறைமுகங்களுடன் இந் நவீன துறைமுகம் 180 கோடி டொலர் செலவில் அமைக்கப்படவுள்ளது.

துறைமுக ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மாத்திரம் ஒருகோடி 40 லட்சம் டொலர் செலவாகும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.


(தி)

# குளங்களைப் புனரமைப்பதில் அதிகளவு வளங்களை முடக்க வேண்டாம்

## யாழ்.அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மிக சிக்கலான சமூக பொருளாதார அமைப்பை உடைய யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களுக்காக பயன்படுத்தப்படும் நிதியை சீரான திட்டமிடலுடன் பயன்



படுத்தல் அவசியம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற “ நியாப்” திட்ட நிறைவேற்று முகவர்களுக்கான அவசர கலந்துரையாடலில், யாழ். மாவட்டத்தில் முன்னுரிமைப்படுத்தப் பட்ட புனரமைப்புப்பற்றி விளக்கிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் விளக்குகையில்,

யாழ். குடா நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் யாவும் குடா நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு எந்த வித்தில் வெற்றிகரமான பங்களிப்பைச் செய்யும் என்பதை நன்கு ஆய்ந்தறிந்தபின்பே நடைமுறைப்படுத்தல் அவசியம்.

இவ்வாறு மக்களுக்கு அதிக நன்மை வழங்கி,மக்களை சமூக பொருளாதார ரீதியாக மேம்படுத்தும் திட்டம் எதுவாக இருந்தாலும் அதற்கு நான் என் முழு ஆதரவையும் வழங்குவதுடன்,என்னால் இயன்ற அளவு நிதியையும் பெற்றுத்தருவேன்.

ஏனைய மாவட்டங்களுடன் யாழ். மாவட்டத்தை ஒப்பிடும்போது நிலப்பரப்பில் குறைந்ததாகவும் குளங்களை நம்பி பயிர் செய்வோர் தொகை குறைவானதாகவும் காணப்படுவதால் ஏனைய மாவட்டங்களைப் போல் எண்ணி எமது மாவட்டத்திலும் குளங்களைப்புனரமைப்பதில் அதிக அளவு நிதியை முடக்கிவிட முடியாது.

இதனைக்கருத்தில் கொண்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை பொருளாதார ரீதியாக உயர்த்துவதற்கு ஏற்ற வகையில் மக்களின் தேவைப்பாடுகள் சூழ்நிலைக்கு ஏற்ப புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியம்.

யாழ். மாவட்டத்தில் வேலையில்லாப்பிரச்சினை பெருமளவில் காணப்படுகின்றது. அதற்கு நிகராக பணி வெற்றிடங்களும் நிறையவே உள்ளன. வறுமைப்பட்டவர்களும் அதிக அளவில் வாழ்கின்றனர்.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் தம் பிரதேசத்தின் தேவைப்பாடுகளையும், சூழ்நிலைகளையும் நன்கு அறிந்து அப்பிரதேசத்தை கட்டி எழுப்ப முன்வர வேண்டும்.

மக்களின் தேவைப்பாடுகளை அறிந்து பொருத்தமான துறைசார்ந்த வகையில் திட்டமிடல் அவசியம் எனவும் தெரிவித்தார்.

மேற்படி கலந்துரையாடலில் நியாப்திட்ட அதிகாரிகள் உட்பட பிரதேச செயலர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், மீன் பிடி திணைக்களஅதிகாரிகள், கால்நடை திணைக்கள அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.(உ-4)

## ஜூலை இறுதியில் டிப்ளோமா பரீட்சை

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கான பட்டப்பின் டிப்ளோமா முதலாவது ஆண்டு பரீட்சை எதிர்வரும் ஜூலை மாத இறுதிப் பகுதியில் நடைபெறலாம் என தேசிய கல்வி நிறுவக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி நிறுவகத்தில் நடாத்தப்படும் இரண்டாம் வருடடிப் ளோமா பரீட்சை நடைபெற்று முடிந்ததும், முதலாம் வருட பரீட்சை பெறுபேறுகள் அண்மையில் வெளிவந்ததும் ஏற்கனவே தெரிந்ததே. (க)

## வணிக நாதம் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கலை வர்த்தக மாணவர் மன்றத்தினரின் 10வது ஆண்டு சிறப்பு மலரான “வணிக நாதம்”சஞ்சிகை நாளை திங்கட்கிழமை வெளிவர உள்ளது. (க)

# யுத்தம் மூலமான தீர்வில் ஜே. வி. பி. க்கு நாட்டம் இல்லை

## ஜனாதிபதி பேட்டி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலமான தீர்வுகளைவிட அரசியல்பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு காணமுடியும் என மக்கள் விடுதலை முன்னணி கருத்து வெளியிட்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இளம் ஆசிய கலைஞர்களின் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியல் தீர்வுகாண்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்தவேண்டும் என்ற எனது தீர்மானத்தில் எந்தவித மாற்றமும் இல்லை.

பல வருடங்களுகக்கு முன்னர் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தாலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டன.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியினால் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை, ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்னெடுத்துச்செல்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பொது ஜன ஐக்கிய முன்னணி மீண்டும்ஆட்சியமைக்கும் பட்சத்தில் இப் பேச்சுவார்த்தைகள் இடையறாது முன்னெடுக்கப்படும் எனவும் அப்பேட்டியில் ஜனாதிபதி உறுதிபடத் தெரிவித்துள்ளார். (தி)

# சவப்பெட்டிகளின் கலாசாரம் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கே உரியது

## அமைச்சர் மகேஸ்வரன் அவையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டு கோரிக்கைகளுக்காக இப்போது பாராளுமன்றத்தினுள்



சவப்பெட்டிகளைக் கொண்டு வருகிறர்கள். ஆனால் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற ஆயிரமாயிரம் தமிழ்ப் படுகொலைகளுககு நாம் அப்பொழுது சவப்பெட்டிகளைப் பாராளுமன்றத்தினுள் கொண்டு வந்து வைத்திருக்க முடியும். ஆனாலும் நாம் அவ்வாறு செய்யவில்லை. இபபோது நீங்கள் இவ்வாறு செய்வது அநாகரிகமான செயல் அல்லவா?

இந்து கலாசர அமைச்சர் தி. மகேஸ்வரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், நீங்கள் இங்கு கொண்டு வந்த சிறிய சவப்பெட்டியானது, உங்களால் கொன்று குவிக்கப்பட்ட சிறுவர்களுக்குத்தான் மிகப்பொருத்தமாக இருக்கும்.

பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற உடத்தலவின்ன படுகொலைக்கு அப்போதைய ஆட்சிக்காலத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தையே இப்போது அக் கொலையின் முதலாவது எதிரியாக இனம் காணப்பட்டுள்ளார். இதை ஏன் பொது ஜன ஐக்கிய முன்னணியினர் விளங்கிக் கொள்வதாக இல்லை.

ஆனால், இன்று கொலைகளுக்கு நியாயம் கற்பிக்க மக்கள் விடுதலை முன்னணியினர் முயன்று வருகின்றனர். அதுபற்றி கருத்து தெரிவிக்க அவர்களுக்கு எந்த அருகதையும் இல்லை. அவ்வாறு அக் கொலைகள் பற்றிப் பேசுவதற்கு ஜே.வி.பி.யினர். இனி வேறு யாரை யாவது தான் நியமிக்க வேண்டும்.

மாகாண சபை உறுப்பினர்களின் படுகொலைகளுக்கும் அரசுக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை. அவை பாதாள உலக கோஷ்டியினரின் செயலேயாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி-15)

# சட்டமா அதிபருக்கு ஜூலை வரை அவகாசம்

(கொழுமப்பு)

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான மனுபற்றி, சட்டமா அதிபர் அடுத்தமாதம் முதலாம் திகதிக்கு முன்னர் தனது கருத்துக்களை வெளியிட வேண்டும் என கொழும்பு உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசியல் யாப்பில் 17வது திருத்தத்தைக் கொண்டு வந்ததன் காரணமாக தான் ஓய்வில் செல்ல முடியாது இருப்பதாக ,தேர்தல் ஆணையாளரினால் தாக்கல் செய்த மனு கொழும்பு உயர் நீதிமன்றில் கடந்த வியாழன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அம்மனுவில் சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி அங்கத்தவர்கள் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

எனக்கு இருதய நோய் ஏற்பட்டுள்ள போதிலும் தொடர்ந்தும் சேவையில் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதற்காக அரசாங்கம் 1 கோடி ரூபாவை நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் எனவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## வடக்கு- கிழக்கு உள்ளூராட்சி சபைகள்

# காணிக் கொள்வனவிற்கு முன்னர் உள்ளூராட்சி அமைச்சின் அனுமதி வேண்டும்

## உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவிப்பு

(சுதுமலை)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள மாநகரசபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என்பன பொதுப்பணிகளை செய்வதற்கு, அரசாங்கத்திற்கு காணிகள் கொள்வனவு செய்வதற்கு முன்னர் உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபையின் உளளூராட்சி அமைச்சின் அங்கீகாரம் பெற்ற பின்னரே கொள்வனவு செய்யவேண்டும் என வடக்கு-கிழக்கு மாகாண உளளூராட்சி ஆணையாளர் து. விஜயலட்சுமி சகல மாநகரசபை ஆணையாளர்கள், பிரதேச சபை நகரசபைகளின் தலைவர், செயலாளர்களிற்கு விசேட சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

அச்சுற்று நிரூபத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உள்ளூராட்சி மன்றங்கள் தமது பிரதேசத்தின் அபிவிருத்தி பணிகளை பரந்த அளவில் செய்துகொள்வதற்கு தனியாரிடம் இருந்தும் பொது நிறுவனங்களிடம் இருந்தும் பொதுத தேவைகளிற்கு காணிகளை பெற்றுக் கொள்ளும் போது அது சம்பந்தமான சகல விபரங்களும் அறிவிக்கப்பட்ட பின்னர் காணியின் தேவை குறித்த அனுமதி சிபார்சு செய்யப்பட்ட பின்னரே காணிகளை கையேற்கும நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதையும் அதில் தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் மாகாண பொது நிர்வாக அமைச்சின் பிரதம செயலாளர், கௌரவ ஆளுநரின் செயலாளர், கணக்காய்வு அதிபதி, பிராந்திய உள்ளூராட்சி உதவ் ஆணையாளர்களிற்கும் அனுப்பப வைக்கப்பட்டுள்ளது.

(க-252)

### பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது

# கிடைத்த நிதி உதவிகளில் 91 வீதமானவை பயன்படுத்தப்படவில்லை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

பெரது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சியில் இருந்தகாலத்தில் கிடைத்த வெளிநாட்டு நிதியுதவிகளில் 91 வீதத்தினை இலங்கை இழந்திருக்கிறது என காணி அமைச்ர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் காணி உறுதிகளை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், பொது ஜன ஐக்கிய முன்னணிஆட்சியில் இருந்த சமயத்தில் வெளிநாடுகளில் இருந்து கிடைத்த நிதியில் 9 வீதத்தினை மட்டுமே செலவிட்டிருக்கிறது.

அது மட்டுமன்றி கடந்த பல வருடங்களாக இலங்கைக்கு கிடைத்து வரும் வெளிநாட்டு நிதியுதவிகளில் 17 வீதத்திற்கும் குறைந்த அளவே செலவிடப்பட்டிருக்கின்றன.

எஞ்சிய தொகையை நிதியுதவி வழங்கிய அமைப்புகளே மீளப் பெற்றன.

ஆனால் ஐக்கியதேசிய முன்னணி அரசு,ஆட்சிக்கு வந்த காலத்தில் இருந்து கிடைத்த நிதிகளில் 45 வீதம் செலவிடப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஜப்பானில் கிடைத்த நிதிகளை உரிய முறையில் பயன்படுத்துவதுடன் அவற்றில் ஒரு சதத்தினையேனும் திருப்பிச் செலுத்தாதவாறு செலவிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதனை அரசு ஒரு சவாலாகக் கருதியே செயறபடுத்தவுள்ளது. என்றார்.

(க-10)

# ஜாதகத்தில் ஒருவரின் தொழில் பற்றி அறிவதற்கு பத்தாமிடமும், பத்தாதிபதியின் நிலையும் முக்கியம்

*தொழிலைப்பற்றிக்* கூறுவது பத்தாம் வீட்டையும் அவ்வீட்டில் நிற்கும் கிரகத்தையும் அதிபதியையும் தொழில்காரகனையும் ஆராய்ந்தோம். இந்தப் பத்தாம்வீடு இலக்கினத்திலிருநது அல்லது சூரியனிலிருந்து அல்லது சந்திரனிலிருந்து பார்க்க வேண்டும். எது பலம்கூடவோ அதையே எடுக்கவேண்டும். சாதகத்தில் ஆகப் பலமான கிரகத்தையும் பத்தாதிபதி நவாம்சத்திலிருக்கும் பலத்தையும் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு கிரகமும் என்ன தொழிலைக் குறிக்கின்றது என ஆராய்வாம்.

### பத்தாமிடத்தில் நிற்கும் கிரகங்களும் அவற்றின்படி செய்ய வேண்டிய தொழில்களும்

***சூரியன்:*** நல்ல அரசாங்க வேலை கிடைக்கும், சீவியம் முழுவதும் பிரகாசமாய் இருக்கும். பெரியவர்களின் சிநேகம் கிட்டும். ஒரு குறிசசிக்குத் தலைவனாவான். மருததுவனாவான். நகை, முத்து முதலியவற்றில் வியாபாரம் செய்வான்.

***சந்திரன்:*** மாலுமி, தாதிவேலை, மருந்துவிற்பனை, கடலுடன் சம்பந்தப்பட்ட வேலைகள், உப்பு வியாபாரம், வங்கியுடன் தொடர்புள்ள வேலைகள் செய்யக்கூடும்.

***செவ்வாய்:*** எல்லாவற்றையும் கொண்டு நடத்தும் திறமை, சில வேளை திடீரெனக் கோபம், அதனால் யோசியாமல் தகாத செயல்கள் செய்தல், வீரத்தன்மை, புதன் பலமாகினால் எஞ்சினியர்வேலை, பல்வைத்தியம், மோட்டார்வண்டி, றேடியோ முதலியன திருத்துதல், சிற்பி, போர்வீரன், மாலுமி, இரும்பு வியாபாரி புதன் பலமில்லாது நின்றால் மேசன், இறைச்சிவியாபாரம், கூலி வேலை, தேகப்பயிற்சி முதலியன.

***புதன்:*** வியாபாரம், பலவிதமான சிறுமுயற்சிகள், எழுத்தாளன், கணக்காயன், உபாத்தியாயன், காரியதரிசி, சிற்பி, சோதிடன், வானசாத்திரி, புடவை வியாபாரி, குதிரைப்பந்தயம், சூதாடல் முதலியவற்றில் வெற்றிபெறுவான். தபாற்காரன், தந்திக்காரன் ஆகிய தொழில்கள் கிட்டும். தனித்த புதன் நல்ல பலனைத் தரா தாகையால், நல்ல பலனைத் தர நல்ல கிரகச் சேர்க்கை அல்லது பார்வை வேண்டும்.

***வியாழன்:*** பொதுவாகச் சீவியத்தில் வெற்றியும் செல்வமுமுண்டு. புதன் பலமாய்நின்றால் நீதிபதி, மந்திரி, இராசதூதுவன், வியாபாரி, தரகன, நியாயதுரந்தரன், குரு ஆகிய கடமைகள் செய்வான்.

***வெள்ளி:*** சீவியத்தில் வெற்றி, புடைவை வியாபாரி, ஓவியம், சங்கீதம், பெண்களுக்கு வேண்டிய வாசனைத்திரவியங்கள், உடுப்புகளில் வியாபாரம்.

***சனி:*** சீவியத்தில் உயர்வும், வீழ்சசியும் உண்டு. புதன் பலமாக நின்றால் எஞ்சினியர், உலாந்தா, நியாயதுரந்தரர், மனேச்சா முதலிய தொழில்கள் கிட்டும்.

பத்தாம் வீட்டில் பல கிரகங்கள் நிறைால் பல வழிகளிலிருந்து வருமானம் வரும். இது நடக்கும் தெசை,

**சோதிடபலன்**

புத்தியைப் பொறுத்தது. இலக்கினத் திலிருந்து அல்லது சூரியனிலருந்து அல்லது சந்திரனிலிருந்து பத்தாம் வீட்டில் கிரகங்கள் இல்லா விட்டால் அந்தக் கிரகங்கள் நவாம் சத்திலிருக்கும் பலத்தைக்கொண்டு பார்க்க வேண்டும். பத்தாதிபதி செவ்வாயின் நவாம் சத்திலிருக்க, செவ்வாய் நாலல் பலமாய் நிற்க விவசாயத்தைக் குறிக்கும். இரண்டாதிபதியை அல்லது பத்தாதிபதியை நல்ல கிரகங்கள் கூடுதல் அல்லது பார்த்தல வட்டிக்குக் கொடுத்தலைக் குறிக்கும்.

### பலவகை வியாபாரம்

பத்தாதிபதி புதனுடைய நவாம் சத்திலும், திரவியத்தானாதிபதி, இலக்கினத்திலும் இருக்க இலக்கினாதிபதியும் இரண்டாதிபதியும் பத்திலிருத்தல், முயற்சித் தானாதிபதி வியாழனாகி, ஆட்சி உச்சமாகி, தனது நவாம்சத்திலேனும், சுக்கிர நவாம்சத்திலேனும் இருக்க அல்லது பத்திலிருக்க வியாழனை நாலிலிருந்து சுக்கிரனாவது புதனாவது நோக்க, அடைவு பிடித்தல் தொழில் செய்வான். இலக்கினாதிபதியும் முயற்சித்தானாதிபதியும் வியாழனது அல்லது சுக்கிரனது நவாம்சத்திலிருந்தால் சரகது வியாபாரஞ் செய்வான். பத்தாதிபதி, புதன், வியாழன், வெள்ளியாகியன நாலில் நிற்றல், நாலாதிபதி பத்தில் ஒன்பதாதிபதியுடன் அல்லது பதிரோதுபதியுடன் நின்றால் பலசரக்கு வியாபாரம் செய்வான். ஒன்பதாதிபதியும், பத்தாதிபதியும் புத, குரு, சுக்கிர நவாம்சங்களில நிற்கில் புடைவை வியாபாரம் செய்வான். ஒன்பதாதிபதியும், பத்தாதிபதியும் பதினொன்றில் நின்றால் புடைவை வியாபாரஞ் செய்வான். ஒன்பதாதியும் பத்தாதிபதியும் ஒன்பதில் நிற்கில் புடைவை வியாபாரம் செய்வான். பத்தாமிடம் மகரம், கும்பம், மிதுனம், கன்னி ஆகிய வீடுகளில் இராகு இருப்பின் புகையிலை வியாபாரஞ் செய்வான். பத்தாதிபதி புதன், சனி நவாம்சத்தில் பலமடைந்திருக்கின் புகையிலை வியாபாரஞ் செய்வான். பத்தாதிபதி செவ்வாய், சனியன் நவாம்சத்தில் நீசமடைய, இலக்கினாதிபதியும் இரண்டாதிபதியும், ஒன்பதாதிபதியும் பத்தில் நீசமாய் இருக்கில் போசன வியாபாரஞ்செய்வான்.

### தொழில் துறைகள்

இரண்டாதிபதியும், பத்தாதிபதியும் கூடிப் புத, குரு, சுக்கிர, சூரிய நவாம்சங்களிலிருத்தல். ஐந்தாதிபதி பத்திலும், பத்தாதிபதி இரண்டிலும் நிற்றல், இரண்டாதிபதி 1, 4, 5, 7,9, 10ல் இருக்க ஐந்தாதிபதியும் பத்தாதிபதியும் கூடி இரண்டிலிருத்தல், ஐந்தாதிபதி, பத்திலிருக்க பத்தாதிபதி ஆட்சிபெற, இரண்டாதிபதி, புதன் இவர்களுடன் நிற்றல் ஆசிரியத் தொழிலைக் குறிக்கும்.

சந்திரன், சுக்கிரன் பத்தாதிபதிகளாக முயற்சித் தானத்தில் பூரண சந்திரன், சுக்கிரன், சனி என்பவற்றுளொன்று பலமாய் இருக்கக் கடற்றொழில் செய்வான். பத்தாதிபதி சனியாகி நான்காமிடத்திலிருத்தல், பத்தில் சனியும், இராகுவும் பலமாக நிற்றல், பத்தாதிபதி சனியினுடைய நவாம்சத்தில் நாலாதிபதியுடனும் இராகுவோடும் கூடிப் பலவானாக இருந்தால் மோட்டர் முதலியன திருத்தம் செய்வான். பத்தாதிபதி நாலாமிடத்தில் பலமாக இருக்க நாலாமிடததில் பத்தாதிபதி செவ்வாயிருக்க, நாலாதிபதி சனியாகிப் பத்தில் நிற்க, பத்தாதிபதி நாலிலிருக்க அல்லது நோக்க வாடகைக்கு வாகனங்கள் விட்டுச் சீவிப்பான்.

### பத்தாமிடத்து இராசிக்குரிய தொழில்

பத்தாம்இடம் எந்த இராசியோ அந்த இராசிக்குரிய தொழிலே கிடைக்கும். உதயலக்கினத திலிருந்து அல்லது சூரியனிலிருந்து அல்லது சந்திரனிலிருந்து பத்தாம் வீடு எநத இராசியோ அந்த இராசிக்குரிய தொழில்களில் திரராசிகளாகிய இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் ஆகில், விவசாயம், மருத்துவம், இலிகிதம், உபாத்தியாயன், பத்திரிகாசிரியன், பிரசங்கி ஆகியன அமையும். இவர்கள் தொழில் செய்வது தங்கள் சொந்த ஊராகவேயிருக்கும். உபயராசிகளாகிய மிதுனம, கன்னி, தனு, மீனம் ஆகில், என்ன விதமான வேலையும் செய்யலாம். சிலகாலம் சொந்தஊரிலும் சிலகாலம் பிற ஊரிலும் தொழில் நடக்கும். சரராசிகளாகிய மேடம், கடகம், துலாம், மகரமாகில், குடிவகை வியாபாரம், துணிவெழுத்தல், கப்பற்றொழில், கடற்றொழில்

செ.சோதிநாதன்

முதலியன. இத்தொழில்கள் செய்வோர் பிற இடங்களிலே தொழில் செய்வர்.

எந்த முயற்சி நல்லதெனத் தேர்நதெடுக்க முன்னர் இலக்கினத்திலும் பத்திலும் நிற்கும் கிரங்களும் அவற்றின் பலமும் அவற்றின் சேர்க்கையும் அவை பெறும் பார்வையும் ஆராயப்பட வேண்டும். சாதகத்தில் பலமாய் நிற்கும் கிரக மெதுவென அறியவேண்டும். சூரியனுக்குக் கிட்ட நிற்கும் கிரகம் எதுவெனவும் அதைப்பார்க்கும் கிரகம் எதுவெனவும், அவை கேந்திர, கோணங்களில் நிற்கின்றனவா என்றும், அவற்றிற்கும், இரண்டாம் வீட்டிற்கும் பத்தாம் வீட்டிற்கும் தொடர்பு இருக்கின்றதா என்றும், ஆட்சி உச்சம் பெற்றவையா? அல்லது நற்கிரக பார்வை இருக்கின்றதா என்றும் பார்கக வேண்டும். புதனுடைய பலத்தைப் பார்க்க வேண்டும். புதனே புத்திகாரகனாகையால் எம் முயற்சிக்கும் புத்தியே அவசியம் தேவை.□

## உலக சென்ஜோன்ஸ் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெற்குப் பிரதேச சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்ஸின் உலக சென்ஜோன்ஸ்தினம் இன்று மு.ப 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில், யாழ். தெற்குப் பிரதேச சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ ஸின் மாவட்ட ஆணையாளர் எஸ் செலவறஞ்சன தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், கௌரவ விருந்தினராக இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனும், முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபா எஸ்.செல்வநாயகம, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னாள் காரியதரிசி எஸ்.செல்வரட்ணம், யாழ்.இந்துக் கல்லூரியின் பிரதிஅதிபர் எல்.ஓங்கார மூர்த்தி, யாழ்.மாவடட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம், ஏ.எம்.டி.எ. திட்டஇணைப்பாளர் கிறோயுகி ஒகாசாகி, யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் சி.பத்மநாதன், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்ஸின் முன்னாள் உதவி ஆணையாளர் திருமதி எஸ்.இராமநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-8)

## நாளை கலிக்காமர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தினரால் நடத்தப்படும் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை வரிசையில் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஏயர்கோன் கலிக்காம நாயனார் குருபூசை இடம்பெறும்.

கல்லூரியில்உள்ள சோமாஸ் கந்தர் ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து ஆன்மீக உரை இடம்பெறும். (க)

# மருத்துவ அதிகாரிகளின் போராட்டம் வியாழக்கிழமை வரை இடைநிறுத்தம்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்க மருத்துவ அதிகாரிகளினால் கடந்த 10ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டு வந்த பொதுவேலை நிறுத்தப் போராட்டத்தை, இம்மாதம் 26ஆம் திகதி வரை தற்காலிகமாக இடை நிறுததப போவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சம்பள அதிகரிப்புக்குறித்து சுகாதாரஅமைச்சின் செயலாளர் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ள சுற்றறிக்கையை, அமைச்சரவை அங்கீகரிப்பதற்கு கால அவகாசம் கொடுக்கும் வகையிலேயே இப் போராடடம் இடைநிறுத்தப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு மருத்துவ அதிகாரிகள் சங்க நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகளின் சம்பள உயர்வுகுறித்த சுற்றுநிருபத்துக்கு அடுத்த அமைச்சரவைக்கூட்டத்தில் அங்ககாரம் பெறப்படும் என அமைச்சின் செயலாளர் மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தை யடுத்து இக்கூட்டம் கூட்டப்பட்டது.

இதேவேளை, சுகாதார அமைச்சின் செயலாளரினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையை இதுவரை அமைச்சரவை அங்ககரிக்காததால் அச்சுற்றறிக்கை பெறுமதியற்றது என மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிக்கிறது. (தி)

# வடக்கு, கிழக்கு பகுதிகளில் 50 ஆயிரம் சிறுவர்கள் அநாதைகள்

## தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்தம்காரணமாக வடக்கு-கிழக்கு பகுதிகளிலிருந்து 2 இலட்சத்து 27 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அண்மையில் நடத்திய ஆய்வு அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, இக் குடும்பங்களில் 3 இலட்சம் சிறுவர்கள் உடல் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். போரினால் பாதிக்கப்பட்டவர்களில் 30ஆயிரம் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

50ஆயிரம் சிறுவர்கள் அநாதைகள் ஆக்கப்பட்டு சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களை மீளக் குடியமர்த்த முதற்கட்டமாக 2 ஆயிரம் கோடிரூபா தேவையெனவும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மதிப்பீடு செய்துள்ளது என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி)

# குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயலும் ஜனாதிபதி சந்திரிகா

## ஜனாதிபதியின் நிலைப்பாடு குறித்து அவதானிகள் கருத்து

(கொழும்பு)

சகல அரசாங்க ஊழியருக்கும் 50% சம்பள உயர்வு வழங்குமாறு ஜனாதிபதி அமைச்சரவைக்கு பணிப்புரை விடுத்தமையானது 'குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் செயல்' என அரசியல் அவதானிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அவதானிகள் மேலும் தெரிவிக்கையில்; தறபோதைய நிலையில் 50% மான சம்பள அதிகரிப்பு வழங்குவது சாத்தியமற்ற ஒன்று. அந்தளவிற்கு திறைசேரியிடம் போதிய பணம் இல்லை என்பது ஜனாதிபதிக்கும் நன்கு தெரியும்.

டோக்கியோ மாநாட்டின் மூலம் கிடைத்த நிதியுதவி அரசாங்க ஊழியருக்கு சம்பள உயர்வு வழங்குவதற்காக வழங்கப்பட்டதல்ல. இந்நிதியானது அபிவிருத்திக்காகவே வழங்கப்பட்டது. இந்நிதி கிடைத்தவுடன் நாட்டின் பொருளாதாரம் சீரடைந்து விட்டது எனக் கூறமுடியாது.

கடந்த காலங்களில் அரசாங்க ஊழியருக்கு சம்பளஉயர்வு வழங்குதல் என்பது தேர்தலை ஒட்டிய செயற்பாடாகவே இருந்து வந்துள்ளது.

எனவே, ஜனாதிபதியின் அறிவிப்பானது ஓர் அரசியல் லாபம் தேடும் முயற்சியேஅன்றி வேறு எதுவும் அல்ல எனவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

(க)

# தனியார் பஸ் கட்டணங்கள் விரைவில் அதிகரிக்கப்படும்

## சங்கத் தலைவர் தெரிவிப்பு

தனியார் பஸ்களுக்கான கட்டணங்களை விரைவில் அதிகரிக்கவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

வருடாந்த கட்டண மறுசீரமைப்பு கொள்கைகளுக்கு ஏற்பவே இந்தக் கட்டண உயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இதேவேளை, தனியார் பஸ் கட்டணங்கள் பல முறை அதிகரித்துள்ளது என்றும் அதற்கு சமமான அளவிற்கு அரச பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை என்றும் அரச போக்குவரத்து அமைச்சர் பியசேன உபாலி தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் அரச பஸ், ரயில் கட்டணங்களை அதிகரிப்பதற்கான பிரேரணை ஒன்று அண்மையில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இப்பிரேரணை தொடர்பாக இதுவரை இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இதேசமயம் கடந்த 10 வருடங்களாக ரயில் கட்டணங்கள் எதுவும் அதிகரிக்கப்படவில்லை. அத்துடன் பஸ் கட்டணமும் நீண்டகாலமாக அதிகரிக்கப்படவில்லை.

இதனால், பல சிரமங்களின் மத்தியிலேயே பஸ் சேவையினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும பல பஸ்களை சேவையிலிருந்து அகற்ற வேணடியும் உள்ளது.


எனவே பாவனைக்குதவாத பஸ்களை அப்புறப்படுத்தி மேலும் பல புதிய பஸ்களை கொள்வனவு செயது போக்குவரத்துச் சேவை சீரான முறையில் வழங்க வேண்டுமானால் அரச பஸ்களுக்கான கட்டணங்களையும் அதிகரிக்க வேண்டும் என்றார்.

(க-10)

## வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான

# இடைக்கால நிர்வாக சபை வழங்கல் இறுதி முடிவு இன்னமும் இல்லையாம்

## பிரதமர் ஜனாதிபதியிடம் நேரில் தெரிவிப்பு





(கொழும்பு)

**வடக்கு-கிழக்கிற்கான இடைகால நிர்வாகத்தினை வழங்குவது தொடர்பாக இன்னமும் அரசு இறுதி முடிவை எடுக்கவில்லையென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் நேரில் தெரிவித்தார்.**

**இது தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளரான ஜனதாசப்பீரிஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான சில எண்ணக்கருக்களை பிரதமர் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்துள்ளார்.

மேலும் நாட்டில் தற்போது சட்ட ஒழுங்குகள் சீர்குலைவது பற்றியும், மக்களின் நலன் கருதி பாதுகாப்பை உறுதி செய்வதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியும் இச்சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை, சட்ட ஒழுங்கு நிலையை பேணுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி மற்றுமொரு சந்திப்பில் கலந்துரையாட ஜனாதிபதியும், பிரதமரும் இணங்கியுள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

### இங்கிலாந்து அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெற்ற 3 ஒரு நாள் சர்வதேச கிரிகெட் போட்டித் தொடரின் 2வது போட்டியில் இங்கிலாந்து அணி பாகிஸ்தான் அணியை 7 விககெறறுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 44ஓவர் முடிவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 185ஓட்டங்களைப் பெற்றது. இதில் யூசுப்ஜெகானா ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களையும், அசார்மெமூட் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜோம்ஸ் அன்ரசன் 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 22ஓவர் முடிவில்3விக்கெற்றுக்களை மாத்திரம் இழந்து, 189 ஓட்டங்களைப் பெற்று அணியில் ரிஸ்கொத்திக் 86 ஓட்டங்களையும், சுலான்சி ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்துள்ளனர்.

இதன்படி, 3 சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரில் இரு அணிகளும் ஒன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் வெற்றிபெற்றுள்ளதால் இறுதியும், மூன்றாவது ஒருநாள் போட்டியுமான இன்று நடைபெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-68)

## எதிர்க்கட்சி உறுப்பினர்களை தாக்கும் திட்டம் அம்பலம்

(கொழும்பு)

பாராளுமன்ற ஊழியர்களின் சீருடையை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அணிவித்து, சபையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களை தாக்கத் திட்டமிட்டமை தொடர்பாக தமக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும், இது குறித்து பூரண விசாரணை நடத்தும்படியும் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன சபாநாயகரிடம் நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பிப் பேசியபோதே இவ்வேண்டுகோளினை விடுத்தார். அங்கு தொடர்ந்து பேசுகையில், பாராளுமன்ற ஊழியர்களின் சீருடைகள வைக்கப்பட்டிருக்கும் களஞ்சியசாலை ஊழியர் ஒருவர் இது தொடர்பாக பாராளுமன்ற அதிகாரிகளிடம் எழுத்து மூலம் முறையிட்டுள்ளார்.

இதன் பிரதி ஒன்று என்னிடம இருப்பதாகவும், சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவுக்கு தெரியாமலேயே இது இடம்பெற்றிருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, களஞ்சிய சாலை ஊழியரின் கடிதத்தின் பிரதி ஒன்றை தமக்கு சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் கேட்டுக்கொண்டதுடன் இது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (தி)

**இன்று மு.ப. 10 மணிக்கு வலம்புரி கேட்போர் கூடத்தில் தரம் 9 மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டியின் பரிசளிப்பு விழா நடைபெறும்**





சைவ வித்தியா விருத்தி சங்கத்தின் புனரமைக்கப்பட்ட வழிபாட்டு மண்டபத்தை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், சங்கத்தில் புதிய கணனி மையத்தை யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி நடராஜசுந்தரம் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். படங்கள்: க.பவன்

## பாராளுமன்றுள்

# சவப்பெட்டி கொண்டுவந்தமை சட்டத்தை மீறும் செயலே

### அமைச்சரும் கொறடாவும் கூட்டாக தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தினுள் மலர் வளையம் கொண்டுவந்தமை, மற்றும் பாராளுமன்றினுள் சவப்பெட்டி கொண்டுவந்து ஒப்பாரி வைத்தமை ஆகியன நாட்டின் சட்டத்தையும், பாராளுமன்ற சிறப்புரிமையையும் மீறிய செயலாகும்.

இவ்வாறு அமைச்சர் லொக்கு பண்டார மற்றும் பிரதம கொறடா மஹிந்த சமரசிங்க ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக பாராளுமன்றில் ஊடகவியலாளர் மாநாடு நடாத்திய வேளையிலேயே இருவரும் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அமைச்சர் லொக்குபண்டார மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற சிறப்புரிமை சட்டத்தின்கீழ் சபாநாயகரும் பீனல் கோட்சட்டத்தின் கீழ் மேல்நீதிமன்றமும் இவர்களுக்கு தண்டனை வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இது பாராளுமன்றத்தை அவமதிக்கும் செயல், கட்சி அரசியலை சட்டம் இயற்றும் நிறுவனமான பாராளுமன்றத்துடன் சேர்த்து குழப்புவது கூடாது. காவலில் நின்ற பொலிஸார் பாராளுமன்றத்துக்குள் பொதிகளைக் கடத்தியது பற்றி சபாநாயகருக்கு முறைப்பாடுகள் செய்துள்ளன. அவற்றைக் கொண்டு வந்த எம்.பிக்கள் விபரங்களும் தரப்பட்டுள்ளன.

1987அம் ஆண்டு பாராளுமன்றத்தினுள் வெடிகுண்டு கொண்டு வரப்பட்டதுபோல் எவரேனும் எதிர்காலத்திலும் அவ்வாறு செய்ய முடியும். இந்த ஒழுக்கக்குறைவான எம்.பிக்கள் மீது சபாநாயகர் கடும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இதுதொடர்பாக மஹிந்த சமரசிங்க தெரிவிக்கையில், எம்.பிக்கள் அணியவேண்டிய ஆடைகள் பற்றி குறிப்பாக சுட்டிக்காட்டும் விதிகள் உள்ளன. சில எம்.பிக்கள் இவற்றை அவமதிக்கும் வகையில் ரி-சேட்டுகள் அணிந்தும் தொப்பிகள் அணிந்தும் வந்திருந்தனர். ஆளும்கட்சி எம்.பிக்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பதற்கு அவர்களைப் பாராட்டுகிறோம் என்றார். (க)

## கோண்டாவில் குழு மோதல் மேலும் தீவிரமடைகிறது

(கொழும்புத்துறை)

கோண்டாவில் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே சில நாட்களாக இடம்பெற்று வந்த மோதல் மேலும் தீவிரமடைந்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற மோதலில் வாள் வெட்டிற்கு இலக்காகி 3 பேர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி தெரியவருவதாவது, அண்மையில் வீதியால் சென்று கொண்டிருந்த யுவதி மீது அங்க சேஷ்டை செய்த ஒரு குழுவினரை வேறொரு குழுவினர் தாக்கியுள்ளனர். இவ்வாறு இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட இம்மோதல் இறுதியில் வாள் வெட்டில் முடிந்துள்ளது.

சம்பவதினம் இரவு வாள் வெட்டு நடந்த இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் அப்பகுதியில் ஆயுதங்களுடன் நடமாடிய 3 பேரை கைது செய்துள்ளனர். இதனையடுத்து அம்மோதல் சம்பவம் அப்போது தணிந்திருந்தாலும் பின்பு ஆங்காங்கே இரு குழுக்களுக்குமிடையே கைகலப்புக்கள் நடைபெற்ற வண்ணமுள்ளது.

அதேவேளை, அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் கோஷ்டி மோதல்கள் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.(உ-51)


**யாழ். மாநகரசபைக்கு பாரஊர்தி மூலம் தார் ஏற்றித் தருவதற்கான கேள்வி அறிவித்தல் - 2003**

**மாநகர சபைக்குத் தேவையான தார் பரல்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சப்புகஸ்கந்த கிளை கொழும்பில் இருந்து பாரஊர்தி மூலம் ஏற்றிவந்து யாழ். மாநகரசபைக் களஞ்சியத்தில் ஒப்படைப்பதற்கான சேவையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களை கோருகின்றோம். விண்ணப்பங்கள் யாவும் மாநகரசபை ஆணையாளருக்கு பதிவுத் தபால்மூலம் 17.07.2003 ஆம் திகதி அன்று நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக கூறு விலைகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.**

| விபரம் | 1 தார் பரலுக்கு ஏற்றுக் கூலி |
|---|---|
| 1. 140 லீற்றர் கொண்ட தார் பரல் (1477) | ...................... |
| 2. 152 லீற்றர் கொண்ட தார் பரல் | ...................... |
| 3. 200 லீற்றர் கொண்ட தார் பரல் | ...................... |

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்.

(c-6289)


### தார்ச்சாலைகள் விபரம் சேகரிப்பு

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகள், நகரசபைகளின் பராமரிப்பிலுள்ள தார் இடப்பட்ட சகல வீதிகளின் விபரப்பட்டியலையும் நாளை திங்கட்கிழமைக்கு முன்பாக தனக்கு அனுப்பி வைக்கும்படி யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி சகல உள்ளூராட்சி மன்றங்களையும் கேட்டுள்ளார்.

தத்தமது உப அலுவலகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வீதிகளின் ஆரம்ப எல்லை, முடிவு எல்லை, அதன் தூரம் (கிலோ மீற்றர்) என்பனவற்றைப் பட்டியலிட்டு தொகுத்துத் தருமாறு ஒவ்வொரு பிரதேச சபைகளையும், நகரசபைகளையும் அவர் கேட்டுள்ளார். (உ-252)

கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்நின்று பின் நோக்காச் சொல்
– குறள்

வலம்புரி

## அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு

''சமாதானம்'' என்ற சொற்பதம் ஒவ்வொரு மனித மனங்களிலும் ஏற்பட வேண்டியதொன்று. மனங்கள் புறந்தள்ளும் சமாதானத்தை, வெறும் வாய்ப்பேச்சுக்களால் தீர்த்து வைக்க முடியாதென்பது அடிப்படை உண்மை.

இத்தகைய அடிப்படை உண்மை, இலங்கையின் சமாதானப் பேச்சுக்களில் உண்டா? என்பது ஆய்வுக்குரியது. ஆனால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளைக் குழப்பியடிக்கும் வகையில் அமெரிக்காவின் கருத்துக்களும், ஆக்கிரமிபபுக்களும் அமைந்துள்ளன.

அரசும், விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட சமாதானப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரே அமெரிக்காவின் ஊடுருவல் அதிகரித்துள்ளது. அதாவது, விடுதலைப்புலிகளுடன் யுத்தம் நடத்திய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அமெரிக்காவிடம் ஆயுத உதவிகளைப் பெறுவதில் அதிகம் அக்கறை காட்டவில்லை. ஆனால் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசு விடுதலைப்புலிகளையும்,தமிழ் மக்களையும் எச்சரிக்கை செய்யும் பாங்கில் அமெரிக்காவின் உதவியைப் பயன்படுத்தி வருகிறது. அது மட்டுமன்றி அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ஆமிடேஜ் மூலம் இடையிடையே விடுதலைப்புலிகளை எச்சரிக்கும் நடவடிக்கையிலும் அரசு மிகத் தந்திரமாக செயற்பட்டு வருகிறது.

இதற்கு மேலாக இப்போது அமெரிக்கா தன்து ஏவுகணைக் கப்பலை கொழும்புத் துறை முகத்தில் நிறுத்திவைத்துள்ளது. இவற்றை நோக்கும் போது, அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கருத்தே முன்னிற்கிறது.


அதாவது, விடுதலைப்புலிகள் சமாதானப்பேச்சுக்களில் இருந்து விலகிச் செல்வார்கள் ஆயின், அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கையரசுக்கு உதவத் தயாராகவுள்ளன. என்ற கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமெரிக்காவின் ஏவுகணைக் கப்பல் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டிருக்கலாம் என்ற ஊகம் நியாயமானதாகும்.

எதுவாயினும், தங்கள் உயிரையே துச்சம் என மதித்து மண்விடுதலைக்காக போராடிய ஈழ மண்ணில் ஆமிடேஜின் மிரட்டல்களும், ஏவுகணைக் கப்பல்களின் வருகையும் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாதென்பதுடன் மாறாக இவை அரசின் சமாதான முயற்சியையே பாதிக்கும் என்ற உண்மையும் உணரப்பட வேண்டியதொன்றாகும். இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாமல்,இலங்கை அரசின் தாளத்திற்கு அமெரிக்கா நடக்க முறபடுமாயின் சமாதானம் என்ற அரும்பு கருகிப் போகும் ஆபத்து ஏற்படுவது தவிர்க்க-தடுக்க முடியாததாகிவிடும்.

# தனவான் கடவுள் இராச்சியத்தினுள் செல்வதிலும் ஒட்டகம் ஊசியின் காதினுள் நுழைவது எளிதாகும்

-மாற்கு சுவிஷேசம்

''கடவுள் இராச்சியம் சிறுபிள்ளைகள் உடையது. ஒரு சிறுபிள்ளை ஏற்பது போல கடவுள் இராச்சி



யத்தை ஏற்றுக் கொள்ளாதவன் எவனோ அவன் அதனுள் செல்ல முடியாது. இது உறுதியென்று உங்களுக்கு சொல்லுகிறேன்''

எனக்கூறிய இயேசு, சிறுவர்களை அணைத்துக்கொண்டு அவர்கள் மேல கைகளை வைத்து ஆசீர்வதித்தார். அதன் பின்னர் அவர் புறப்பட்டு நடந்து போகையில் ஒருவன் அவரிடம் ஓடிவந்து, முழங்காலில் நின்று ''நல்ல போதகரே! நித்திய ஜீவனைச் சுதந்தரிக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும'' என்று கேட்டான். இயேசு அவனிடம், ''ஏன் என்னை நல்லவர் என்று அழைக்கிறாய்? கடவுள் ஒருவரைத் தவிர நல்லவர் வேறெவருமில்லையே'' என்று சொல்லி விட்டு ''திருக்கட்டளைகளை நீ அறிந்திருக்கிறாய்; கொலை செய்ய வேண்டாம், விபச்சாரம் செய்ய வேண்டாம், களவு செய்ய வேண்டாம், பொய்ச்சாட்சி சொல்ல வேண்டாம், வஞ்சனை செய்ய வேண்டாம், உன்தகப்பனையும், உன்தாயையும் கனம் செய்பவாயாக'' என்றார்.

### பரலோக பொக்கிஷம்

அதற்கு அவன், ''போதகரே இவை எல்லாவற்றையும் என் இளமைப் பருவம் முதல் கொண்டே நான் கைக்கொண்டு வந்திருக்கிறேன்'' என்றான். இயேசு அவனைக் கூர்ந்து நோக்கி அவன் மீது அன்பு கொண்டு, ''உன்னிடத்தில் குறைபாடு ஒன்று இருக்கிறது; நீ போய் உனக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடுத்துவிடு, பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் கிடைக்கும். பிறகு வந்து என்னை பின்பற்றி நட'' என்றார்.அவன் மிகுந்த செல்வமுள்ளவனாய் இருந்தபடியால் இந்த வார்த்தையை கேட்டதும் முகம்வாடி துயரத்தோடு போய் விட்டான்.

அப்பொழுது இயேசு சுற்றிலும் பார்த்து தம் சீடர்களிடம்''செல்வமுள்ளவர்கள் கடவுள் இராச்சியத்தினுள் செல்வது எவ்வளவு அரிது பாருங்கள்'' என்றார். அவர் சொன்னதை சீடர்கள் கேட்டு திகைப்படைந்தார்கள். இயேசு பின்னும் அவர்களிடம்,''பிள்ளைகளே! செல்வத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் கடவுளின் இராச்சியத்தினுள் செல்லுதல் மிகவும் அரிது. தனவான் ஒருவன் கடவுள் இராச்சியத்தினுள் செல்வதைக் காட்டிலும் ஒட்டகம் ஊசியின் காதினுள் நுழைவதே எளிது எனலாம்'' என்று சொன்னார். அவர்கள் மிகவும் திகைப்புற்று, ''அப்படியானால் யார்தான் இரச் சிப்பு பெறமுடியும்?''என்று தங்களிடையே பேசிக் கொண்டார்கள். இயேசு அவர்கள் திகைத்ததைக் கண்டு ''மனிதரால் இது முடியாது கடவுளுக்கோ அப்படியல்ல, கடவுளால் எல்லாம் முடியும் என்றார்.

### நித்திய ஜீவன்

பேதுரு பேசத் தொடங்கி ''நாங்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு உம்மை பின்பற்றி வந்தவர்கள் ஆயிற்றே'' என்று சொன்னான். அதற்குள் இயேசு, ''என்நிமிர்தமாகவும் சுவிஷேசத்தின் நிமிர்த்தமாகவும் வீட்டையாவது சகோதர சகோதரிகளையாவது, தாய் தகப்பனையாவது, பிள்ளைகளாவது, நிலங்களையாவது விட்டுவிட்டவன் எவனும் இப்போதுள்ள காலத்தில் 100 மடங்காக இவற்றோடு துன்பங்களையும் அடைவான். வரப்போகும் யுகத்தில் நித்திய ஜீவனையும் அடைவான் இதை உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன். ஆனாலும் முந்தினோராயிருக்கிறவர்களில் அனேகர் பிந்தினோராயும் பிந்தினோர் முந்தினோராயும் இருப்பார்கள்'' என்றார்.

பிறகு அவர்கள் ஜெருசலேமுக்குப் பயணமாகச் செல்லும் வழியில் இயேசு சீடர்களுக்கு முன்னால் நடந்து போய்க் கொண்டிருந்தார் சீடர்களுக்கு திகைப்புண்டாயிற்று பின்னே சென்றவர்கள் பயந்து கொண்டு போனார்கள். அப்பொழுது அவர் பன்னிருவரையும் ஒருபக்கமாக அழைத்து தமக்கு நேரிடப் போகும் காரியங்களை அவர்களுக்கு சொல்லத் தொடங்கினார் ''நாம் இப்போது ஜெருசலேமுக்கு செல்லுகின்றோம் மனிதகுமாரன் தலைமை ஆச்சாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார். அவர்கள் அவருக்குக் கொலைத் தீர்ப்பளித்து அவரை யூதர் அல்லாதவரிடம் ஒப்புக் கொடுப்பார்கள். அவர்கள் அவரை பரிகாசம் செய்து அவர் மேல் துப்பி, வாரினால் அடித்து அவரைக் கொன்று போடுவார்கள். மூன்று நாட்களின் பின் அவர் உயிரோடு எழுந்திருப்பார்'' என்றார். □

# புலிகளின் இராணுவ பலத்திற்கேற்ப அரச படைப்பலம் பெருக வேண்டும்

## பொ.ஐ.மு பொதுச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் வளர்ச்சி பெற்றுள்ளனர்.இதனால் எதிர் காலத்தில் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களை எதிர் நோக்கும் பொருட்டு அரசாங்கம் அதன் இராணுவ பலத்தை பலப்படுத்த வேண்டும். பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரட்ண நேற்றுக் காலை வானொலி நிகழ்வொன்றுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவ்வானொலி நிகழ்வுக்குத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், இதற்காக அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் கொள்கை அளவில் உடன்பாடு காண வேண்டும்.

இருந்த போதிலும் ரணில் விக்கிரமசிங்காவினால் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் .புலிகள் மேற்கொண்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகளை முற்றாக கைவிட வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினாலும் இணைந்து மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளின் மூலம்தான் ஆக்க பூர்வமான முடிவுகளை பெறமுடியும் எனவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். (தி)

# அநீதி இழைக்கப்பட்ட பொலிஸாரிற்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

## உட்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்தகால நியமனங்களின் போது அநீதி இழைக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாக உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அத்தியட்சகர்களுடனான கலந்துரையாடலின் போதே அமைச்சர் ஜோன் அமரதுங்கா இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்ட போது அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அரசியல் தலையீடுகள அதிகரித்திருந்தன.பொலிஸாருக்கு நியமனங்கள் வழங்கப்படும் போது பதவி உயர்வுகள்,சம்பளம் வழங்குதல்,இடமாற்றம் போன்றவற்றில் பலருக்கு பாராபட்சம் காட்டப்பட்டதென்றார்.

இதேவேளை,நீண்ட நாட்களாக அத்தியட்சகர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லையென பொலிஸ் அத்தியட்சகர்கள் சங்கத் தலைவர் ஜே.எல்.குணரட்ண சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்குப் பதிலளித்த உட்துறை அமைச்சா ஜோன் அமரதுங்கா இது குறித்து பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். (க-10)

## ஆலோசனைக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியக் கூட்டம் இன்று காலை10.30 மணிக்கு யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாத இறுதிப் பகுதியில் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமும் யாழ்.குடா நாட்டு மக்களும் ஒன்றிணைந்து நடாத்தவுள்ள 'மக்கள் எழுச்சி நிகழ்வு'பற்றிய ஆலோசனைகள் இன்று கலந்துரையாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.(க-15)

## திினசரி தியானம்

### ஆத்மீகச் செல்வம்

''போதும்'' என்ற மனநிறைவே உண்மையாக ஒருவரைச் செல்வந்தனாக்குகிறது. பேராசைத தீயானது மனநிறைவு என்கின்ற சாவா மருந்தாகிய அமுதத்தால் அணைக்கப்படுகிறது. எல்லா ஆசைகளையும் துறந்துவிட்ட துறவிக்கு சொத்து சுகம் உடைமைகள் ஏது? கோட்டைகளும் அரண்மனைகளும் எதற்காக? அவர் இவற்றையெல்லாம் ஈவிரக்கமின்றி உதைத்து தள்ளி விட்டிருக்கிறார். மூவுலகத்தினும் வைராக்கியம் தான் மிகப் பெரிய செல்வந்தன். ஆகவே மேலான குறையாத அழியாத பொருளாகிய உன்னுள்ளத்தில் மறைந்திருக்கின்ற ஆத்மீக ஞானத்தைப் பெறுவாயாக! அதுவே உயர்ந்த மிகப்பெரிய செல்வம்.

சுவாமி சிவானந்தர்

# 81-வது சர்வதேச கூட்டுறவு தினப்போட்டி பரிசு பெற்றோர் விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

81-வது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட கூட்டுறவு சபையினால் பாடசாலை மாணவர்களுக்கென நடாத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, சித்திரம், வினாடி வினா ஆகிய போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் விபரம் வருமாறு.

### பேச்சுப்போட்டி

ஆண்டு10,11 பேச்சு 1ம் தெ.ஹர்சன், யா/மத்திய கல்லூரி, 2ம் இடம் வே.கஜேந்திரன் யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, 3ம்இடம் ச.கிருத்தியா திருக்குடும்ப கன்னியர் மடம்.

ஆண்டு 12,13 பேச்சு 1ம் இடம் ச.தேவகினி விக்கினேஸ்வரா பாடசாலை கரவெட்டி, 2ம் இடம் செ. பிரதீபா விக்கினேஸ்வரா பாடசாலை கரவெட்டி

### கட்டுரைப்போட்டி

ஆண்டு 12,13கட்டுரைப்போட்டி, 1ம் இடம் ரவீந்திர சர்மா கிரிதரன் யா/மத்தியகல்லூரி 2ம் இடம் ஜெயப்பிரியா ஜெயதீஸ்வரன் யா/இந்து மகளிர்கல்லூரி, 3ம் இடம் வினர்ஜிதா அன்ரனி சில்வெஸ்ரர் யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.

ஆண்டு10,11கட்டுரைப்போட்டி, 1ம் இடம் கோ.தாட்சாயினி யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி 2ம்இடம் மு.சதீயா சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 3ம் இடம் பா. கார்த்தீபன் யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

### சித்திரப்போட்டி

ஆண்டு10,11 1ம்இடம் க. இராகவன் யா/ விக்கினேஸ்வரா கல்லூரி, 2ம் இடம் ந.தட்சாமினி யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,3ம் இடம் பிறேமலதா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

சித்திரப்போட்டி 12,13 1ம் இடம் ஜெஸ்மின் கார்மேலா சேவியர் வில்பிரட் யா/திருக்குடும்பக் கன்னியர் மடம், 2ம்இடம் சீ.சுலோசனா யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் மகாவித்தியாலயம்

3ம் இடம் பா.சுரேஸ்கண்ணா யா/இணுவில் மத்திய கல்லூரி

வினாடிவினாப் போட்டி 1ம் இடம் யா/இந்துமகளிர்கல்லூரி 2ம் இடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 3ம் இடம் யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

மேற்படி போட்டியில் முதலாம் இடம்பெற்ற மாணவர்கள் இம்மாதம் 28 ஆம் திகதி வவுனியா பூந்தோட்டத்திலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிறுவகத்தில் நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொள்வதற்காக இம்மாதம் 27ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா புறப்படுகிறார்கள் இவர்களுக்கான போக்குவரத்துச் செலவுகள் வவுனியா பூந்தோட்ட கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தில் வைத்து வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பரிசளிப்பு வைபவம்

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் 2003ஆம் ஆண்டின் 3வது பரீட்சைக்கான பரிசளிப்பு வைபவமும், பருவ அறிக்கை வழங்கல் நிகழ்வும் இன்று பி.ப 4.00 மணிக்கு நிறுவனத்தின் பீரதான மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (த)

---

### கூட்டணி...

நடவடிக்கைகளை ஒழுங்கான முறையில் செய்யாது போனால் உங்களது விசா மற்றும் ஆவணங்களை இந்தியா பறிமுதல் செய்ய வேண்டி வரும் என்று எச்சரிக்கை செய்யும் தோரணையில் கூறியுள்ளதாக அறியவந்துள்ளது.

அது தொடர்பாக தூதுவர் சென் கூட்டணி எம்.பிக்களிடம் மேலும் கூறுகையில, அகில இலங்கை தமிழ்க் காங்கிரசைப்பற்றியோ மற்றும் ஏனைய கட்சிகளைப் பற்றியோ எமக்கு எதுவிதமான கவலையும் இல்லை.ஆனால் அன்று தொட்டு இன்று வரை உங்கள் கட்சி இந்தியாவுடன் நல்லுறவைப் பேணி வந்துள்ளபடியால்தான் உங்களைச் சந்தித்துப் பேசியுள்ளேன்.இந் நிலையில் உங்களது அரசியல் நடவடிக்கைகளை ஒழுங்கான முறையில் முன்னெடுத்துச் செல்லுங்கள்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்டகாலமாக இருந்து வரும் சுமுகமான உறவினை உங்களாலோ அல்லது வேறெந்த சக்தியாலோ பிரிக்க முடியாதென்றும் கூறியுள்ளார்.இந்தியத் தூதுவருடனான இச் சந்திப்பின் போது தமிழர் விடுதலைக கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி,செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன,மாவை சேனாதிராசா ஜோசப்பரராசசிங்கம், அரியநாயகம் சந்திரநேரு, என்.ரவிராஜ், எஸ்.கிருஷ்ண பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர். (ம)

### ஏகப்பிரதி...

ஒருவரை நியமித்திருக்கிறார்கள் அவ்வளவுதான். என்னை எவரும் நீக்கவும் இல்லை. நீக்கக்கூடிய அதிகாரமும் இல்லை.

என்னுடைய தலைமைத்துவத்தை நீக்குவதற்கு என்னுடைய கட்சிதான் தீர்மானிக்க வேண்டும். விடுதலைப்புலிகள் பற்றி விமர்சிப்பதாக கூறுவதற்கு விடுதலைப்புலிகளுக்கு நான் மாறுபட்டவன் இல்லை சில நிலைப்பாட்டை நான் எடுத்திருக்கிறேன். குறிப்பாக ஏகப் பிரதிநிதித்துவம் என்று சொல்லுகின்ற அதிகாரத்தை எங்களுடைய மக்கள் தரவும் இல்லை. எமது கட்சியும் அப்படித் தீர்மானிக்கவில்லை.

ஏனென்றால், பாராளுமன்றத்தில் வேறு கட்சியை சேர்ந்த சிலர் இருக்கின்றார்கள். இருந்த போதிலும் விடுதலைப்புலிகளுடன் மட்டுமே பேச வேண்டுமென்ன அரசாங்கத்துக்கு நாங்கள் அழுத்தம் கொடுத்தது உண்மை.தொடர்ந்தும் நாங்கள் அழுத்தம் கொடுத்து வருகிறோம் ஆனால் அதற்கு தப்பான விமர்சனம் கொடுக்கப் படுகிறதே தவிர, புலிகளை எதிர்க்க வேண்டும், அவர்களுக்கு மாறாக செயற்பட வேண்டும் என்ற எண்ணம் கனவிலும் எனக்கும் இல்லை;கட்சிக்கும் இல்லை. கட்சி தொடர்ந்தும் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஒத்துழைப்பைக் கொடுக்கும்.

ஆனால் இப்படித்தான் செய்ய வேண்டும் என்று சொல்ல யாரும் கேட்பது சரியில்லை. ஏதோ ஒரு சிலர் மலையைப் புரட்டப் போவதாக கூறுகிறார்கள். புரட்ட முடியும் என்றால் புரட்டிப் பார்க்கட்டும். அதனை நான் சவாலாக விடவில்லை.

நான் ஒதுங்குவதுதான் மக்களுடைய விருப்பமாக இருந்தால் அதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் அந்நிலை வராது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு மக்களுக்கும் என்மீது நம்பிக்கை உண்டு.

இவ்வாறு ஆனந்த சங்கரி அந்தச் செவ்வியில் தெரிவித்துள்ளார். (த)

---

### வடமராட்சி...

துறை அலுவலகத்திலும் யாழ். மாவட்ட அரசியல் துறையிலும் முறையிடப்பட்டுள்ளதுடன் யாழ். மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சில நாட்களாக குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் கடற்படையினர் பாதுகாப்பைப் பலப்படுத்தி வருவதுடன் சோதனை நடவடிக்கைகளையும் ஆரம்பித்திருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. (க-4-43)

### இலங்கை வாசி

## இத்தாலியில் மர்ம மரணம்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவர் மர்மமான முறையில் இத்தாலியில் மரணமாகியுள்ளார்.பி.எச். நிமலசிறீ (வயது 49) என்பவரே மரணமானவராவார்.

இத்தாலியில் இருந்து கொழும்புக்கு எடுத்து வரப்பட்ட இவரது சடலம் பிரேதபரிசோதனைக்குட் படுத்தப்பட்டது. பிரேதப் பரிசோதனையை மேற் கொண்ட சட்ட வைத்திய அதிகாரி அவரது உடலில் இருந்து இருதயம் உட்பட முக்கிய உறுப்புக்கள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவரது மனைவி சாட்சியம் அளிக்கையில் சில தினங்களுக்கு முன் கணவர் தன்னுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் இம் மரணம் தொடர்பாகத் தான் சந்தேகம் கொண்டுள்ள தாகவும் தெரிவித்தார்.(ச-3)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நீதிச் சேவை ஆணைக் குழு உயர் நீதி மன்றப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை இம் மாதம் 20ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானியில் பார்வையிட முடியும். (க-10)

---

### இடைக்கால.....

இல்லை.இச் சந்திப்பு சுமார் 2மணி நேரம் நடைபெற்றது. இச்சந்திப்பின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி சந்திரிகாவுடன் வடக்கு கிழக்கு பாதுகாப்பு நிலைபரம்,நாட்டின் ஒட்டு மொத்தமான பாதுகாப்பு, வடக்குக் கிழக்கு மற்றும் தென் பகுதியில் அரசியல்வாதிகள் சுட்டுக் கொல்லப்படுத்தல் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. நாட்டின் பாதுகாப்புக் கருதி பிரதி மாதம் தோறும் படை உயரதிகாரிகளை ஜனாதிபதி அல்லது பிரதமர் சந்தித்துப் பேசுவதென்றும் இச் சந்திப்பில் இருவரும் இணக்கம் கண்டுள்ளனர்.

அண்மையில் டோக்கியோ மாநாட்டில் கிடைத்துள்ள நிதியுதவிகளை எதிர்க் கட்சிகளுடன் கலந்து பேசி செலவு செய்வதையே தான் விரும்புவதாக பிரதமர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.இச் சந்திப்பின் போது வடக்குக் கிழக்கில் தமிழ் அரசியல்வாதிகள் சுட்டுக் கொல்லப்படுவதையும் ஜனாதிபதி கண்டித்து பிரதமரிடம் கவலை வெளியிட்டுள்ளார். (ம)

### இறங்குதுறை...

படையினர் அவர்களை ஒவ்வொருவராக உடற் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

அதேவேளை தினமும் காலை 10 மணிக்கு இறங்கு துறைக்கு சென்று மாலை 3மணிக்கு திரும்பிவிட வேண்டுமெனவும் உத்தரவிட்டனர்.

படையினரின் இந்த உத்தரவுகளை ஏற்க மறுத்த ஊழியர்கள் தமது பணிகளை புறக்கணித்துள்ளனர்.

இதனால் இறங்கு துறையில் பொருட்கள் இறக்கும் பணிகள் நேற்று முழுநாளும் நடைபெறவில்லை. இதனால் குடாநாட்டுக்கு சீனியை ஏற்றிக்கொண்டு வந்த இந்தியக் கப்பல்காங்கேசன்துறை துறைமுகத்திற்கு திரும்பச் சென்றுள்ளது.

இதேவேளை கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக எந்த விதமான சோதனைகளும் இன்றி இறங்கு துறைப் பணிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் படையினரின் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்படுவதுடன் இறங்கு துறை ஊழியர்கள் எந்தவிதமான சோதனைகளும் இன்றி தமது பணியை ஆற்றுவதற்கு படைத்தரப்பு உத்தரவாதம் தர வேண்டும் என்றும் அவ்வாறு உத்தரவாதம் தரப்படாத பட்சத்தில் தமது பணிகளை முற்றாக நிறுத்தப்போவதாகவும் இறங்குதுறை ஊழியர்கள் எசசரித்துள்ளனர்.(த-43,52,245,4)


செவ்வாய் மாற்றம் எப்படி?

07.08.2003 - 06.10.2003 இலங்கை ராசி கும்பத்தில் இரு மாத வக்கிரயுத்தச் செவ்வாய்-சனி குருவை நோக்குவதால் அரசியல், இராணுவ மாற்றங்களையும் போர் முஸ்தீபுகளையும் உண்டாக்கும் (சத்தியாவின்) சனிமாற்றம் எங்கும் விற்பனையாகின்றது.

(C/6296)



THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆண்டு 1-ல் இருந்து
மேற்படிப்பு வரை
பதிவுக்கு தலைமை ஆசிரியர்
426,(302),K.K.S.ROAD,JAFFNA



MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

முஸ்தீபுகளையும் உண்டாக்கும் (சத்தியாவின்)
சனிமாற்றம் எங்கும் விற்பனையாகின்றது.
(C/6296)

மேற்படிப்பு வரை
பதிவுக்கு தலைமை ஆசிரியர்
426,(302),K.K.S.ROAD,JAFFNA

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி

- எந்தப் பிரதேசத்திலும் தொடர்பு கொள்ளக்கூடிய முறையில் மேசைத் தொலைபேசிகள் இணைப்புக்களுடன் வழங்கப்படும்.
- மேசைத் தொலைபேசிக்குரிய பில் கனைக்சன் உடன் செய்து தரப்படும்.
- கையடக்க தொலைபேசிக்குரிய அன்ரனாக்களும் பொருத்தித் தரப்படும்.
- கையடக்க தொலைபேசிகளுக்கு "லொக்" உடைத்துத் தரப்படும்.

**IDD அழைப்புக்களுக்கு ஒரு நிமிடம் 25/=**

**உள்வரும் அழைப்புக்கள் முற்றிலும் இலவசம்**

**உத்தரவாதம் உண்டு**

**எமது பாவனையாளர் கவனத்துக்கு 071 உடன் 28 சேர்த்து (0712) அழுத்தவும்**

எமது அங்கீகாரம் பெற்ற முகவர்கள்:

- வீ.ரி. தொலைத்தொடர்பு சேவை, கே.கே.எஸ். வீதி, இணுவில், சுன்னாகம். 070-213292
- இந்திரா தொலைத் தொடர்பு நிலையம், நயினாதீவு, அனலைதீவு. 071-2793226
- சண்தொலைத் தொடர்பு நிலையம், திக்கரை, காரைநகர். 070-213190, 071-2299264
- சொலெக்ஸ் ஒப்ரிகல், 100, கண்டி வீதி, சாவகச்சேரி. 0777-855328
- குட்டி, பண்டத்தரிப்பு. 071-2399208
- ஆர். தயாகரம், வட்டுக்கோட்டை. 0777-244524
- வ. அரவிந்தன், சுழிபுரம். 0777-550949
- பவர் தொலைத் தொடர்பு நிலையம், நெடுந்தீவு. 071-2381192, 071-2381187
- ஆர். ஆனந்தன், கலைவாணி வீதி, சித்தன்கேணி. 0712-297314
- திருப்பதி தொலைத்தொடர்பு நிலையம் மானிப்பாய். 0777-722914, 070-213352, 021-5940, 021-5732
- விஜய் வீடியோ சென்ரர், புங்குடுதீவு. 071-2399113
- சுதன் தொலைத் தொடர்பு நிலையம், மிருசுவில். 0777-584896

**வீட்டில் இருந்தவாறே எந்தப் பிரதேசத்திலும் தொடர்பு கொள்ளக் கூடிய வசதி உடன் பெற்றுத்தரப்படும்.**



**மேலும் முகவர்கள் தேவைப்படுகின்றனர்.**

எமது தொடர்புகளுக்கு:-

## POWER CELLULAR



**1st Flat 185, Kasthuriyar Road Jaffna**

(வின்சர் தியேட்டருக்கு முன்பாக நியூலலிதா கட்டடம்)

T.P:- -0712399220, 0777242416 Fax:- 0712381125 E-mail - Power@c/.lk

(C/6295)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.